# மக்கள் மறு வாழ்வு

மலர்: 4] ஐப்பசி-அக்டோபர் 1985 [இதழ்: 1

மக்கள் மறு வாழ்வு
சந்தா விபரம்
தனிப்பிரதி 75 காசுகள்
வருட சந்தா ரூ.10-00
விபரங்களுக்கு:
மக்கள் மறுவாழ்வு
சென்னை-600 094

### பாரதப் பிரதமர் ராஜீவுக்கு ஒரு பகிரங்க கடிதம்:

## இந்திய சமுத்திரத்தின் மீது ஏவுகணை பாய்வதற்கு எங்கள் கல்லறைகள் நிலைகளமாகும்!



மாண்புமிகு பிரதமர் அவர்களே;

இந்தியாவின் இளமைப் பொலிவுடனும், துடிப்புடனும் ஆட்சி பீடத்தில் அமர்ந்து உலகக் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு எனது பாராட்டு மிக்க வணக்கங்கள். நீங்கள் அரசு கட்டிலேறிய நேரம், அன்னை இந்திராவைப் பயங்கரவாதத்துக்குப்பலி கொடுத்துவிட்டு பாரதம் தடுமாறி நின்றநேரம் நீங்கள் துணிகரமாக செயற்பட்டீர்கள். பாரதத்துக்கு தெம்பு ஊட்டினீர்கள். பாரதத்தை 21 ம் நூற்றாண்டிற்கு அழைத்துச்செல்வோம் என்று சூளுரைத்தீர்கள். இந்திய ஒற்றுமையையும், பலத்தையும் சிதைக்க முனைந்த சதிகளை முறியடித்து நாட்டில் ஒற்றுமையையும், நம்பிக்கையையும் நிலை நாட்டினீர்கள். இந்தியாவை ஊறு செய்ய முனையும் சக்திகளை வெல்ல முடியும் என்று நிருபித்துக் காட்டியுள்ளீர்கள். மகிழ்கிறோம். வாழ்க, பொலிக என வாழ்த்துகிறோம்.

அண்டை நாடுகள் அனைத்துடனும் நட்புரிமையை நிலைநாட்டும் உங்கள் உள்ளார்ந்த கொள்கை போற்றுதற்குரியது ஆனால் இந்தத் துறையில் வெற்றி பெறுவது இரு சாராரைச் சார்ந்துள்ளது. இந்தியாவிற்கு இருக்கின்ற ஆர்வம், அண்டை நாடுகளுக்கும் இருந்தால்தான் இந்தக் கொள்கை வெற்றி அடைய முடியும். பஞ்சாபுக்கும் ஹரியாவுக்கும், ராஜஸ்தானுக்கும் அஸ்ஸாமுக்கும் இடையில் உள்ளமுரண்பாடுகளை,குறைபாடுகளைக்கலைவது உள்வீட்டுப் பிரச்சனை.எத்தகைய முறையில் அவை செய்யப்பட்டாலும் இந்தியாவின் பொது நலம் பேணப்படுகிறது. சண்டிகார் நகரம் ஹரியனா எல்லைக்குள் இருந்தாலும், பஞ்சாப் எல்லைக்குள் இருந்தாலும் இந்தியாவில்தானே இருக்கும். அல்லாமலும் இந்த முடிவுகளை செயற்படுத்தும் ஆற்றலும், உறுதியும் உங்களிடத்தில் தானே இருக்கிறது?

ஆனால் இந்தியாவிற்கும்-சீனாவுக்கும் உள்ள எல்லைத் தகராறுகளை இப்படித் தீர்த்துக் கொள்ள முடியுமா? அல்லது பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையே இப்படி இணைப்பு ஏற்படுத்தமுடியுமா? இதிலுள்ள சிரமங்களை நீங்கள் ஆழமாக உணர்ந்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் உரைகளும், செயற்திட்டங்களும்உணர்த்தி வருகின்றன.

இலங்கையைப் பொறுத்த மட்டும்தான் உங்கள் கொள்கைகள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. நீங்கள் மட்டுமல்ல, உங்களுக்கு முன்னால் இருந்த பிரதமர்கள் கூட, இலங்கையைப் பற்றி சற்று அகிரத்தையாகவே நடந்து வந்துள்ளார்கள். சிறிய நாடுதானே, விட்டுக் கொடுப்போமே என்ற மனோபாவத்தில் இந்தியத் தலைவர்கள் நடந்து கொண்ட காரணத்தால்தான், இன்று இலங்கைப் பிரச்சனை பூதாகாரமாக வளர்ந்துள்ளது. இலங்கை இனப் பிரச்சனை இந்திய துணைக்கண்டத்துக்கு இடப்பட்ட சவாலாக இருந்து வருகிறது. ஒருண்மையை நாம் சொல்லி வைக்க விரும்புகிறோம்.இந்தியாவின் தன்மானத்தை, அரசியல் விவேகத்தை பிராந்திய வல்லரசுத் தன்மையைப் பரிசோதிக்கும் நிலைக்களமாக இலங்கை அமைந்துள்ளது.

(15ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் வருகை

இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சனைக் காரணமாக 1983 ஜுலை முதல் 1985 ஆகஸ்ட் முடிய சுமார் 23734 இலங்கைத் தமிழரகள் அகதிகளாக தமிழ் நாட்டில் இராமேஸ்வரம் வந்து சேர்ந்துள்ளார்கள்.

83 ஜுலை முதல் 85 பெப்ரவரி வரை 1, 843 பேரும், 85 பெப்ரவரியில் 10, 838 பேரும், மார்ச்சில் 6337 பேரும், ஏப்ரலில் 1179 பேரும்,மேயில் 813 பேரும், ஜுன்னில் 1130 பேரும், ஜுலையில் 747 பேரும் அகதிகளாக வந்துள்ளனர். பகை நிறுத்தம் மற்றும் திம்புப்பேச்சின்போது யாரும் வருவது நின்றது. பின் ஆகஸ்ட் 4-ந் தேதி 9 பேரும் ஆகஸ்ட் 20 யில் 20 பேரும் அகதிகளாக வந்துள்ளதோடு மேலும் வந்துக்கொண்டு உள்ளனர். இது தமிழ்நாடு மறுவாழ்வுத் துறையின் தகவலாகும். []

# மக்கள் மறுவாழ்வு

மலர்: 4 ஐப்பசி அக்டோபர் இதழ்: 1


# நான்காம் ஆண்டில் நமது ஏடு

மக்கள் மறுவாழ்வு மூன்றாண்டுகளைக் கடந்து நான்காவது ஆண்டில் தனது பயணத்தை தொடர்கிறது. 'அரிமா நோக்கு'டன் கடந்து வந்த மூன்றாண்டுகளையும் கம்பீரமாக—மிடுக்கோடு திரும்பிப் பார்க்கின்றோம்—கடந்துவந்த காலச்சுவடுகள் நமக்கு மலைப்பையும், மகிழ்ச்சியையும் ஊட்டுகிறது—இவ்வளவா என்ற திகைப்பையும் அதே வேளையில் இவ்வளவுதானா என்ற அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது.

சிறிமாவோ—சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கிற தாயகம் திரும்பிய மக்களின் **நல்வாழ்வு**க்காகவும் **மேம்பாட்**டுக்காகவும், இம் மக்கள் இந்திய மக்களோடு இணைந்து சமத்துவத்தோடு வாழவேண்டுமென்ற தேசிய **ஒருங்கிணைப்பு**க்காகவும் மட்டுமல்லாது இலங்கையிலேயே குடியுரிமை பெற்றும், குடியுரிமையற்றும் வாழும் மலையகத் தமிழ் மக்களின் மற்றும் 'ஈழத்தமிழ்' மக்களின் **விடுதலைக்**காகவும் பாடுபடுவது என்ற லட்சியத்தோடு தொடக்கப்பட்டு தனது பயணத்தை தொடர்ந்து வந்திருக்கிறது.

இலங்கையிலிருந்து வந்து இந்தியாவில் தமிழ் நாட்டிலும் பிற தென்மாநிலங்களிலும் குடியேறி வாழும் தாயகம் திரும்பிய மக்களில் 90 சதவீதமாக மக்கள் தமது மறுவாழ்வை முறையாக அமைத்துக்கொள்ள முடியாமல் வறுமையில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு மூலம் கிடைக்கவேண்டிய மறுவாழ்வுதவிகள் உரிய காலத்தில், உரிய முறையில் கிடைக்கவில்லை; இதற்கு பல இடர்பாடுகள், சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்களின் முறைகேடுகள், இடைத்தரகர்களின் குறிக்கீடுகள் காரணமாக இருக்கின்றன. இதனால் தாயகம் திரும்பியோர் தமது மறுவாழ்வை அமைத்துக் கொள்ள முடியவில்லை; உணவில்லை உறைவிடம் இல்லை; வேலையில்லை; நோய் நொடியில் மரணம்—இப்படி சீர் குலைந்துப்போன தாயகம் திரும்பிய மக்கள் பிரச்சனைகளை மட்டுமல்ல; இலங்கையில் நடக்கும் வன்முறையால் உயிருக்கு அஞ்சி எல்லாம் இழந்து வரும் அகதிகள் பிரச்சனைகளையும் எடுத்துச் சொல்ல தயங்கியதில்லை.

தாயகம் திரும்பியோர் இந்திய மக்களோடு ஒருங்கிணைய வேண்டும். எல்லாவகையிலும் ஒருங்கிணைவதன் மூலம் தமக்குரிய பிரச்சனைகளை மட்டுமல்ல, பொதுவான பிரச்சனைகளையும் வென்றெடுக்க முடியும். தம்மை 'தாயகம் திரும்பியோர்' என்று குறிப்பிடுவதை மறந்து 'இந்தியர்' களாக மாறிக்கொள்ளவேண்டும் என்று உள்ளூர் மக்களின் மற்றும் பிரச்சனைகளைப், விஷயங்களையும் பிரசுரித்து வருகிறது. இருசாரார் மத்தியிலும் இவை சென்றடையும் வண்ணம் செய்து வருவதோடு, இரு சாராரும் ஒருவரை ஒருவர் தெரிந்துக்கொண்டு ஒன்றிணைந்திட பாடுபட்டு வந்திருக்கிறது.

இலங்கை மலையகத்தில் வாழும் மக்கள் அந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு முதுகெலும்பாக இருந்தும் உரிமையற்ற மக்களாக எல்லாவகையிலும் ஒடுக்கப்பட்ட மக்களாக வாழ்கிறார்கள்; அவ்வப்போது சிங்கள இன வெறியர்களின் கொடுமைக்கும் ஆளாகி உயிரையும் உடமைகளையும் இழந்து வருகிறார்கள். வடக்கு, கிழக்கு தமிழ் பிரதேசத்தில் — அப்பிரதேசத்திற்கே சொந்தக் காரர்களான தமிழ் மக்கள், சிங்கள பேரினவாத அரசின் இன ஒடுக்கல் கொள்கைக்கு ஆளாகி, இன்று எல்லாம் இழந்த நிலையில் தமது உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள்; சிங்கள முப்படையின்—குண்டர்கள் கூட்டங்களின் கொடுமைக்கும் தமிழ் மக்கள் ஆளாகி அகதிகளாகிக் கொண்டிருக்கிறார்கள்—இந்த மக்களின் விடுதலைக்காகவும் 'மக்கள் மறுவாழ்வு' குரல் கொடுத்து வந்துள்ளது.

இவற்றோடு மட்டும் நின்று விடவில்லை; தாயகம் திரும்பும் மக்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் விளங்கி வந்திருக்கிறது இவர்கள் தமது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும், வருமானம் பெறவும் பொருளாதார மேம்பாட்டுக்கும் ஆலோசனைகளை வழங்கிவருகிறது. வேலை வாய்ப்பு, கல்வி போன்றவற்றின் தகவல்களை எல்லாம் வெளியிட்டு வந்துள்ளது. பலர் அதன் மூலம் பலன் பெற்றிருக்கிறார்கள்.

இவற்றை எந்தளவிற்கு சிறப்பாக செய்திருக்கிறோம் என்றால் காலத்தால் ஆற்றிய காரியத்தால் இது பூர்ண திருப்தி தரக்கூடியவைகளாக இல்லை. காரணம் எமக்குரிய வசதிப்புகள் கிடைக்காமையே...

மக்கள் மறுவாழ்வு வியாபார நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையல்ல; தாயகம் திரும்பியோர்களின்—அவர்களைச் சார்ந்த மக்களின் சமூக நலனுக்காகவே நடைபெற்று வருவதாகும், அந்த வகையில் மக்கள் மறுவாழ்வு பெருவாரியாக இலவசமாகவே சிலரை சென்றடைகிறது—பலர் பெறுகிறார்கள்.

மக்கள் மறுவாழ்வு தனக்கென்று உரிய பொருளாதார வாய்ப்பு இல்லாமலே நடைபெற்று வருகின்றது. வெளிவந்துள்ள ஒவ்வொரு இதழும் ஒரு சாதனை. எமக்கு கிடைத்த குறைந்த வாய்ப்பை வைத்துக்கொண்டு செய்துள்ளவற்றை நினைவு கூர்ந்து பார்க்கும் போது, தான் நடந்துவந்த பாதையை நோக்கு அரிமாவின் மிடுக்கும், கம்பீரமும் எனக்கு ஏற்படுகிறது.

இந்த மிடுக்குடனும், கம்பீரந்துடனும், கம்பீரத்தடனும் நாம் நோக்க காரணமாக பல நண்பர்கள். சமூக சேவையாளர், அமைப்புகள் எமக்கு பின்னணியாக துணைப்புரிந்து இருக்கின்றனர். தற்போது 'ஐலன்ட் டிரஸ்ட்' என்ற சமூக சேவா நிறுவனத்துடன் இணைந்துககாண்டு உங்கள் முன் மக்கள் மறுவாழ்வு வந்து கொண்டிருக்கிறது.

மக்கள் மறுவாழ்வு வெளிவரவும், வளரவும் துணைப்புரிந்த—புரிந்துக் கொண்டிருக்கிற அனைவருக்கும் எமது நன்றி மலர்களை சமர்ப்பிப்பதோடு வாசகர்களாகிய உங்கள் வாழ்த்துகளுக்கும் ஆதரவுக்கும் நன்றி கூர்ந்து, தொடர்ந்து உங்கள் ஆதரவினை தந்திட வேண்டுகிறோம்.

# இலங்கை அகதிகளில் 'இவர்களின்' எதிர்காலம் என்ன?

இந்த கேள்வி தமிழகத்தில் பல முகாம்களில் வசித்து வரும் அகதிகள் மத்தியில் எழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது பற்றிய சில விபரங்களை இங்கே அறியத் தருகிறேன்.

இலங்கை இனவெறிக்கு உள்ளாகி 1977ம் ஆண்டு பாதிக்கப்பட்டு வடபகுதிகளில் சென்று குடியேறிய வம்சாவழித் தமிழர்களுக்கும் (மலையக மக்கள்) இலங்கையில் குடியுரிமையின்றி அடிமையாக வாழ்ந்து வந்த இவர்களைப் போன்று (சிங்கள மக்கள் மத்தியில் வசித்து) 1983ம் ஆண்டு இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களும் அகதிகளாக தமிழகத்தில் பல முகாம்களில் வசித்து வருகிறார்கள்.

இந்த அகதிகள் இலங்கையில் குடியுரிமை இன்றி வம்சாவழித் தமிழர்களாக, நாடற்ற பிரஜைகளாக கணிக்கப்பட்டவர்கள். 83ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் இலங்கை முகாம்களில் தஞ்சம் புகுந்த இந்த அகதிகளை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் இந்தியாவுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்தது. அதன்படி நேரு-கொத்தலாவலைபாஸ்போர்ட் உள்ளவர்களையும், ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் குடும்ப அட்டை இல்லாதவர்களையும், மேற்குறிப்பிட்ட ஒப்பந்த அடிப்படையில் இனபந்துக்கள் யாருக்கேனும் பாஸ்போர்ட் இருந்தால் அதன் அடிப்படையில் அவசரகால சான்றிதழ்கள் வழங்கியும், நாடற்ற பிரஜைகளுக்கான அறிமுகச சான்றிதழை வழங்கியும் இவர்களை தமிழகத்திற்கு அனுப்பிவைத்தது.

இது தவிர ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பித்து எந்த பதிலும் கிடைக்கப் பெறாமலும், விண்ணப்பித்த அத்தாட்சிகள் பறிகொடுக்கப்பட்டும் பல அகதிகள் முகாம்களில் தங்கி இருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜையுமல்லாமல், இந்தியப் பிரஜை என்ற அந்தஸ்தும் இல்லாமல், நாடற்ற பிரஜைகளாக ஆனால் அகதிகள் என்று முகாம்களில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அகதிகள் எக்காரணத்தை முன்னிட்டும் இலங்கைக்கு திரும்பிச் செல்வது இல்லையெனவும், இவர்களை இந்திய அரசு மறுவாழ்வு உதவிகள் அளித்து குடியேற்ற வேண்டும் எனவும் கோருவது குறிப்பிடத்தக்கது.

இந்த அகதிகளில் சுமார் 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட குடும்பங்கள் திருச்சி, தூத்துக்குடி, நாகபட்டினம், ஆத்தூர் மேலும் பல முகாம்களில் இருக்கிறார்கள். இவர்கள் கடந்த ஓராண்டுக்கு மேலாக இது விடயமாக பல மனுக்களை மத்திய மாநில அரசு மறுவாழ்வு அதிகாரிகளுக்கு அனுப்பிய வண்ணமிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர்கள் இந்தியாவில் குடியேறுவதற்கான முக்கிய காரணங்கள் இலங்கையில் குடியுரிமை இல்லாததும், இலங்கைப் பிரச்சினை தீர்ந்த பின்னரும் வடபகுதியில் குடியேற முடியாததால் மீண்டும் சிங்கள மக்கள் மத்தியில் வாழ வேண்டியநிலை ஏற்பட்டுமீண்டும் மீண்டும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என்பதாலும், ஏதாவது ஒரு நாட்டில் குடியுரிமை பெற்று நிரந்தரமாக வேண்டும் என்பதாலும் இலங்கையில் இவர்கள் இந்திய வம்சாவழி என்று காலம் காலமாக ஒதுக்கப்பட்டு வந்தாலும், இனிமேலும் இப்படி ஒரு நிலை ஏற்பட்டு, தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்பதாலுமே ஆகும்.

இலங்கைப் பிரச்சனை தீர்ந்து அனைத்து அகதிகளும் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற இந்திய அரசின் அறிவித்தல்கள் இந்த மக்கள் மத்தியில் ஒரு பயங்கர பீதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதனால் தங்களின் எதிர்காலம் என்னாவது? எங்களைப்போல் எங்கள் குழந்தைகளும் மீண்டும்இலங்கையில் சென்று கஷ்டப்பட வேண்டுமா? என்ற கேள்விகள் இவர்கள் மத்தியிலே எழுந்து இந்தப் பிரச்சினையில் அரசு தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த அகதிகள் மத்தியிலே பல அமைப்புக்களும், குழுக்களும் முகாம்களில் உருவாகி அரசுடன் தொடர்பு கொண்டு எந்த பதிலும் இன்றி காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் காலம் காலமாக தமிழர்கள் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள், பல இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இனவெறி தலைதூக்கி ஆடிக்கொண்டிருக்கின்றது. இவற்றுக்கு முற்றுப் புள்ளி வைக்குமுகமாக விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களையும், தீர்வுக்கு வழி வகுக்க ஒத்துழைக்கும் இந்திய அரசையும் இவர்கள் முழுமையாக ஆதரித்து தங்கள் ஒத்துழைப்புக்களையும் கொடுத்துக் கொண்டிருககிறார்கள்.

இலங்கைப் பிரச்சனைக்கு சரியான தீர்வு ஏற்பட நேர்ந்தால் இவர்களில் பல குடும்பங்கள் இலங்கைக்கு திரும்பிச் செல்லும் நிலை உருவாகலாம் என்பதும், அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் தமிழகம் வந்து சரியான மறுவாழ்வு வசதியின்றி அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் (தாயகம் திரும்பியோர்) திரும்ப இலங்கைக்கே செல்ல தயாராகி உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

—நாடக நித்திலம்

# தப்பிவந்த அகதிகளை ஏற்க முகாம்கள் மறுப்பு!

திருகோணமலையிலிருந்து சிங்கள ராணுவத்தின் கொடூர வெறிச் செயல்களிலிருந்து தப்பி வந்த 72 தமிழ் அகதிகளை ஏற்க மறுத்தது மல்லாமல், "யாரைக் கேட்டு இங்கே வந்தீர்கள்? வெளியே போங்கள்! இங்கே நிற்கவே வேண்டாம்" என்று 'அன்பு வரவேற்பு' கொடுத்த சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

16 குடும்பங்களைச் சேர்ந்த 72 பேர் இரண்டு நாள் கடற் பயணத்தின் பின் 5. 9. 85 மாலை நாகபட்டினம் வந்து கரை சேர்ந்தனர். இவர்களில் 37 பேர் குழந்தைகள்.

நாகபட்டினம் அகதிகள் முகாம் அதிகாரிகள் இவர்களை திருச்சி முகாமுக்குப் போகுமாறு கூறி ஒரு கடிதமும் கொடுத்தனர். ஆனால் இவர்களின் போக்குவரத்துக்கு எவ்வித வசதியையும் ஏற்படுத்தவில்லை. நாகபட்டினம் ரோட்டரிக் கிளப் ஒரு தனியார் பஸ் மூலம் இவர்களது பயணத்திற்கு வழி செய்தது. 6ம் திகதி மாலை3 மணியளவில் திருச்சி வந்து சேர்ந்தனர்.

திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாம் அதிகாரிகள் இவர்களை முகாமில் ஏற்க மறுத்ததோடு, மேற்குறிப்பிட்டவாறு இளிவாகப் பேசியும் உள்ளனர். அத்தோடு, "நீ எப்படி பஸ்ஸை உள்ளே

(14ம் பக்கம் பார்க்க)

## ஒத்துழைப்புக்கு நன்றி

நாள்: 12-9-1985

எனது பெருமதிப்பிற்குரிய ராஜு அவர்களுக்கு,

வணக்கம், நலம், நலம் அறிய அவா, மக்கள் மறுவாழ்வு செப்டம்பர் இதழில் தாயகம் திரும்பியோர் வங்கி நிர்வாக இயக்குநராக இருந்து நான் தாயகம் திரும்பியோருக்காக செய்த பணிகளைப் பற்றி மிக்க நல்ல முறையில் எழுதப்பட்டுள்ளதற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் சொள்கிறேன், கடந்த 3 ஆண்டுகளுக்கு மேல் நான் வங்கியின் நிர்வாக இயக்குநராக இருந்து பணிபுரிந்த போது தாங்களும் திரு. எம். ஆர். லிங்கம் அவர்களும் திரு. உதயணன் அவர்களும் மற்றும் பலரும் எனக்கு தந்த ஒத்துழைப்பை மறக்க இயலாது. எனது மனமார்ந்த நன்றியினை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
ஏ. எம். சுந்தரராஜ்

★

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி டெலிகேட் யூனியன் தலைவருக்கு எழுதிய கடிதத்தின் நகல்:—

## பிரதி உபகாரம் வேண்டாம்

நாள்: 12-9-1985

பெருமதிப்பிற்குறிய திரு உதயணன் அவர்களுக்கு.

மக்கள் மறுவாழ்வு செப்டம்பர் இதழில் எனக்கு பெருமை தரும் விதத்தில் நான் தாயகம் திரும்பியோர் வங்கி நிர்வாக இயக்குநராக இருந்து பணி புரிந்ததை குறிப்பிட்டு இருக்கிறீர்கள். எனக்கு பிரிவு உபச்சாரமும், பாராட்டுக்களும், அன்பளிப்புகளும் வழங்க தங்கள் தலைமையில் இயங்கும் தாயகம் திரும்பியோர் வங்கி டெலிகேட் யூனியன் தீர்மானித்திருப்பதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் அவைகளை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இருப்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாயகம் திரும்பியோருக்கு என்னால் முடிந்த அளவில் நான் பணியாற்றினேன். சில தொழிற்சாலைகளில் தாயகம் திரும்பியோர் தமக்கு உரிய பயன்களை பெற முடியவில்லை. இருப்பினும் பெரும்பாலானோர் தொழில் நிலையங்களில் நல்ல முறையில் பணியாற்றி தங்களையும் தங்கள் குடும்பத்தையும் நல்ல முறையில் பாதுகாக்கும் நிலையில் இருக்கிறார்கள்.

நான் செய்த கடமைக்கு பிரதி உபகாரம் கேட்பதோ, ஏற்பதோ சரியல்ல, என்ற கருத்தை உடையவனாக இருக்கிறேன். ஆகவே தாங்கள் தயவு செய்து எனக்கு பிரிவு உபச்சாரமும், பாராட்டுக்கள் வழங்குவதையும் தவிர்க்க வேண்டுகிறேன். இதை தங்கள் சக டெலிகேட்டுகளுக்கு தெரிவிக்கும்படியும் கேட்டிக் கொள்கிறேன். நான் நிர்வாக இயக்குநராக இருந்தபோது தாங்களும் தங்கள் சகோதர பிரதிநிதிகளும் இயக்குநர் திரு. லிங்கம் அவர்களும் எனக்கு கொடுத்த ஒத்துழைப்பை நான் என்றும் மறக்க இயலாது. அதற்காக நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

தங்கள் அன்புள்ள
ஏ. எம். சுந்தர்ராஜ்

# மத்திய அரசு விரும்பினால் மாநில அரசு மறுக்கிறது!

"தாயகம் திரும்புவோருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற வகையில் சிறிய பெரிய நிறுவனம் என்று பாராது தாயகம் திரும்பியோர் வங்கிக்கடன் அளித்து வந்தது. சிறிய நிறுவனங்களில் தாயகம் திரும்பியோர்கள் திருப்திகரமாகவும், உரிய பாதுகாப்புடனும் இல்லாததால், இப்போது சிறிய நிறுவனங்கள் எதற்கும் கடன் கொடுப்பதோ, தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதோ இல்லை. மில்கள் ஆலைகள் போன்ற பெரிய நிறுவனங்களுக்கே கடனுதவி செய்யப்பட்டு தாயகம்திரும்பியோருக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது"

இவ்வாறு, கோத்தகிரியில் நடைபெற்ற மறுவாழ்வு (ஊக்குனர்) பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் இயக்குனர் திரு.எம்.ஆர்.லிங்கம் தெரிவித்தார்.

மேலும் பேசுகையில், தாயகம் திரும்பியோர்களுக்கு மத்திய அரசு உதவ நினைக்கும் அளவிற்கு மாநில அரசு அக்கறை கொள்வதில்லை! மாற்றாந்தாய் மனப்பான்மையே காட்டி வருகிறது.

இதனுடைய அசிரத்தை, அலட்சியத்தால் தமிழ் நாட்டில் 60க்கு மேற்பட்ட காலனிகளில் அமைக்கப்பட்ட வீடுகள் அத்திவாரத்தோடும், குட்டிச் சுவரோடும், கூரைகள் இல்லாமலும் காட்சி அளிக்கின்றனர். ஆந்தளவிற்கு இடைத்தரகர்களும் வளர்ந்து உள்ளார்கள்" என்றும் குறிப்பிட்டார்.

## தேசிய நீரோட்டத்தில் கலக்க வேண்டும்

கருத்தரங்கில் கலந்து கொண்ட தமிழ்நாடு தாயகம் திரும்பியோர் சங்கத்தின் தலைவர் திரு. வெற்றிவேல் பேசுகையில் நாம் தேசீய நீரோட்டத்தில் கலந்து நமது பிரச்சனைகளுக்காக போராட வேண்டுமென்றார்.

## உள்ளூர் வாசிகளை எதற்காக வெறுக்க வேண்டும்?

"நீங்கள் உள்ளூர்வாசிகளை ஏன் வெறுக்கிறீர்கள்? பகை கொள்கிறீர்கள்? சிற்சில படித்தவர்களைத் தவிர அவர்களுக்கு உங்களைப் பற்றி என்ன தெரியும். படகர் சமூகத்தில் இன்னும் பஸ் ஏறி டிக்கட் வாங்கத் தெரியாதவர்கள் இருக்கிறார்கள். எனவே எதையும் புரியாதவர்களாக அறியாதவர்களாக இருக்கும் அவர்களுக்கு உங்களைப்பற்றி எடுத்துச் சொல்லுங்கள்,

இலங்கையில் எப்படி நீங்கள் பின்தங்கிய சமூகமாக இருந்தீர்களோ அதே போல தான் நாங்களும் இங்கே இருக்கிறோம். 1962க்குப் பின்னர்தான் எங்கள் மத்தியில் படித்தவர்கள் தோன்றினார்கள்.

நாம் ஒருவருக்கு ஒருவர் பழகுவதன் மூலம் நம்மைப் பற்றி புரிந்து கொள்ள முடியும். நமக்குள்ள தப்பபிப்ராயங்களை போக்கிக்கொள்ள முடியும்"

இவ்வாறு கருத்தரங்கில் கலந்து கொண்ட அட்வகேட் துரைசாமி அவர்கள் தெரிவித்தார்கள்,

## மறுவாழ்வு உதவிக்கு என்று எழுதிவந்தாலொழிய

# நீலகிரி மாவட்டத்தில் சலுகைகள் இல்லை.

"தாயகம் திரும்பியவர்கள் பெரும்பாலோர் நீலகிரி மாவட்டத்திற்கே வருகிறார்கள். இப்படி வருகிறவர்கள் பெரும்பாலும், கடன் உதவி பெற்றுக் கொண்டு சொந்த ஊர்களுக்கு போனவர்களேயாவார்கள். இவர்களுக்கு நீலகிரியில் எந்த விதமான சலுகையும் இல்லை"

இவ்வாறு, நீலகிரியில் வெஸ்ட் புரூக்கில் நடந்த தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு (ஊக்குனர்) பயிற்சி கருத்தரங்கில் கோத்தகிரி தாசில்தார் திரு. ஜான் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது—

"தாயகம் திரும்பியோர்கள் முதலில் வரும்போது திருடர்களாக — கொலையாளிகள் போல வரவேற்கப்பட்டார்கள் இப்போது அந்த நிலைமை இல்லை.

## வழிகாட்டல் இல்லை

இந்த கருத்தரங்கம் ஆரம்ப காலத்தில் நடந்திருக்குமானால் இந்த மக்கள் கஷ்டப்படும் நிலைகளை தவிர்த்திருக்கலாம்.

தாயகம் திரும்பியோர்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தை நாங்கள் கேள்விப்பட்டோமே தவிர, வேறு எதையும் எங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. உயர் அதிகளாக இருந்தும்கூட எங்களால் எதுவும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

தாயகம் திரும்பியோர்களுக்கு பல சலுகைகள் உண்டு. அதை அவர்களால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. கண்டியில் ஏதாவது எழுதிக்கொண்டு வருகிறார்கள். ஆந்திராபோன்ற இடங்களுக்கு செல்கிறார்கள். அங்கு வேலையில்லை என்று திரும்பி வருகிறார்கள். மண்டபமுகாமில் 3000 கடனுதவி பெற்றுக் கொண்டு வருகிறார்கள். புரோக்கர் முதலியவர்களிடம் பெருந்தொகையை செலவு செய்துவிட்டு சொற்பதொகையோடு வருகிறவர்கள் இதை வைத்து என்னசெய்யமுடியும். ஒரு பெட்டிக்கடை கூட வைக்க முடியாது. அரசு நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, நீலகிரி மாவட்டத்திற்கு எழுதிவந்தவர்களுக்கு மட்டும்தான். சலுகைகள்—உதவிகள் மற்றவர்களுக்கு எதுவும் இல்லை. அவர்களுக்கு எங்களால் எதுவும் செய்யமுடியாது.

அதுமட்டுமல்ல; இங்கு மறுவாழ்வு அதிகாரியில்லை; ஒரே ஒரு கிளார்க் மட்டுமே இருக்கிறார். அதனால் தாயகம் திரும்பியோர் பிரச்னைகளை சரிவர பரிசீலனை செய்து உதவ முடியவில்லை.

உங்களை போன்ற அமைப்புகள் இவர்களுக்கு உதவ முன்வருமானால் நாங்கள் அரிய உதவிகள் செய்ய தயாராக இருக்கிறோம்.

நீங்கள் பிளாஸ்டிக் சமுதாயமாக இல்லாமல் காங்கிரீட் போட்ட கெட்டியான சமூகமாக வளர வேண்டும் என்று தெரிவித்தார்.

## பத்து நாள் கருத்தரங்கம்

மறுவாழ்வு ஊக்குனர் பயிற்சி கருத்தரங்கம் 29.8.85 முதல் 7.9.85 வரை பத்து நாட்கள் நடைபெற்றது.

முதல் நாள் அன்று ஆரம்பித்து பேசுகையில் திரு. ஆர். சிவலிங்கம் அவர்கள், "உலகில் பல நாடுகளிலிருந்து அகதிகள் பலர் வெளியேறுகிறார்கள் அகதிகள் பிரச்சனை என்பது உலகில் மிக முக்கிய பிரச்சனையாக இருக்கிறது.

இலங்கையிலிருந்து அகதிகள் திரும்புதல்—இலங்கை இனப்போராட்டம் போன்ற பிரச்சனைகள், தாயகம் திரும்பியோர் பிரச்சனை மழுங்கடிக்கப்பட்டுவிட்டது; மறைக்கப்பட்டு வருகிறது. இது நமது இழைக்கப்பட்டுவரும் 'அநீதி' என்று தெரிவித்தார்.

## மலைநாட்டு வாழ்க்கை


"ஆங்காங்கே கருத்தரங்குகள் நடப்பதன் மூலம், தங்கள் பிரச்சனைகளை தாங்களே புரிந்துகொண்டு தாங்களாகவே தங்களுக்கு பணிசெய்யும் நிலைக்கு உயர்வார்கள்.

நீலகிரி போன்ற மலைப்பகுதிக்கு தாயகம் திரும்பியோர் வரக்காரணம் தட்ப வெப்ப நிலை. எவ்வளவு கஷ்டம் என்றாலும், தாம் பழகிய மண்பிரதேச வாழ்க்கை, தட்ப வெப்ப நிலை இவர்களை மலைப்பகுதிகளில் வாழ நிர்ப்பந்திக்கிறது.


நீலகிரி போன்ற பகுதிகளில் தாயகம் திரும்பியோர் புறக்கணிக்கப்பட்ட வெறுத்தொதுக்கப்பட்ட சமுதாயமாக மாறி வருகிறார்கள். தீண்டத்தகாத இனம்போலவும் மாறி வருகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் இந்திய மக்களோடு ஒருங்கிணைந்து வாழ தயாராக வேண்டும். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அவற்றிற்கு ஈடுகொடுத்து உள்ளூர் மக்கள் மத்தியில் நம்மை யார் என்று விளக்க வேண்டும்" என்று கருத்தரங்கில் சகோதரர் எ. டி. அல்போன்சஸ் கருத்து தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் பகுதியில் குடியேறி வாழும் தாயகம் திரும்பியோர் மத்தியில் சேவையாற்றி வரும்—சேவையாற்ற விரும்பும் பல இளைஞர்களும், யுவதிகளும் கலந்து கொண்டார்கள். தாயகம் திரும்பியோர் மட்டுமல்ல; தாயகம் திரும்பியோர் மத்தியில் வாழும் பல உள்ளூர் இளைஞர்களும், பெண்களும் கலந்துகொண்டார்கள்.

(6ம் பக்கம் பார்க்க)



☐ கருத்தரங்கில் கலந்து கொண்டோரில் சிலர்



○ கருத்தரங்கில் கலந்துகொண்ட பெண்கள்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டில் தாயகம் திரும்பியோர் மத்தியில் பணி செய்யும் அமைப்புகள், சங்கங்கள் மற்றும் உள்ளூர் மக்கள் கிராமப்புற மக்கள் மத்தியில் பணிசெய்யும் அமைப்புகளை சார்ந்தவர்கள், பிரமுகர்கள் பயிற்சியாளர்களாக கலந்து கொண்டு பயனுள்ள பல விடயங்கள் குறித்து விளக்கவுரை நிகழ்த்தினர்.

## ஏனிந்த கருத்தரங்கு?

மறுவாழ்வு ஊக்குனர் பயிற்சி முகாம் நோக்கம் குறித்தும் இதன் மூலம் ஊக்குனர்களுக்கு என்ன பலன், அவர்கள் தாயகம் திரும்பியோர் மத்தியில் பணிசெய்வது குறித்த கருத்துகளை திரு. ஆர். ஆர். சிவலிங்கம் தெரிவித்தார்.

2ம் நாள் கருத்தரங்கில், தாயகம் திரும்பியோர்களது வரலாறும்—அவர்தம் பிரச்சனைகள் குறித்தும் திரு. சிவலிங்கம் விளக்கவுரை அளித்தார்.

'தாயகம் திரும்பியோர்—அவர்கள் எதிர்நோக்கும் பணிகள்' குறித்து பேசிய திரு. எஸ். திருச்செந்தூரான் அவர்கள் எதிர்நோக்கியுள்ள பணிகள், அவற்றை எப்படி நிறைவேற்றுவதுகுறித்துபேசினார்.

## ஒரு குடும்பம்-மறுவாழ்வு பிரச்சனைகள்

ஒரு தாயகம் திருப்பியகுடும்பம் மறுவாழ்வுபெறுவதிலுள்ள பிரச்சனைகள் குறித்து பேசிய திரு. வாமதேவன் தாயகம் திரும்பியோர் எத்தனைவிற்கு மறுவாழ்வு உதவிகள் பெற்று பயன் அடைந்திருக்கிறார்கள்; பிரச்சனைகளுடன் வாழ்கிறார்கள் என்பதை புள்ளி விபர ஆதாரங்கள் காட்டி பேசினார்.

தற்போது தாயகம் திரும்பியோர் பிரச்சனைகளை ஆராய்ந்துவரும் ஒரு ஆய்வாளர் திரு. திரு. வாமதேவன் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய கருத்தரங்கில் திரு. சாந்தகிருஷ்ணன், 'தாயகம் திரும்பியோர் மத்தியில் பணிசெய்யும்போது எதிர்நோக்கும் பிரச்சனைகள்' குறித்து தனது அனுபவங்களை எடுத்துக் கூறினார்.

4ம் நாள் அன்று அனைத்து ஊக்குனர்களும், பயிற்சியாளர்களும் பிரிந்து சென்ற கோத்தகிரி பகுதியில் அமைந்துள்ள தாயகம் திரும்பியோர் குடியிருப்புகளைப் பார்வையிட்டு அவர்களுக்குள்ள பிரச்சனைகளை ஆராய்ந்து வந்தனர்.

## உதவிகள் பெறுவதில் பிரச்சனைகள்

மறுதினம், 'தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு உதவிகள் பெறுவதிலுள்ள பிரச்சனைகள்' என்பது குறித்து திரு. டி. எஸ். ராஜு பேசினார். இவற்றிற்கான காரணங்களை விளக்கியதோடு அவற்றை எவ்வாறு பெறலாம் எனவும், அதற்கு கூட்டு முயற்சியும், தாயகம் திரும்பியோர் மத்தியில் ஒருங்கிணைப்பின் அவசியம் குறித்தும் தனது கருத்துகளை தெரிவித்தார்.

## தொண்டு நிறுவனங்கள்

'மறுவாழ்வும் அதற்கு தொண்டு நிறுவனங்களின் பங்கு' குறித்து சகோதரர் அல்போன்ஸ் அவர்கள்பேசினார். உலகலாவ தொண்டு நிறுவனங்கள் எவ்வாறு இயங்குகின்றன; தாயகம் திரும்பியோர் மத்தியில் எவ்வாறான பணிகளை இவைகள் செய்கின்றன என்பது போன்ற விளக்கங்கள் அளித்தார்.

'இந்த தொண்டு நிறுவனங்களின் பயன்கள் என்பது பற்றி திரு. சிவலிங்கம் அவர்கள் பேசினார்.

## கிராமப்புற மக்களுடன்

அன்றைய தினம் பிற்பகல், 'கிராம புற மக்களும், தாயகம் திரும்பியோர்களும் ஒன்றிணைவது' குறித்து கிராமிய மேம்பாட்டு இயக்க இயக்குனர் திரு. எம்.கே.பெருமாள் பேசினார்.

தாயகம் திரும்பியோர் தொடர்ந்து தங்களை தாயகம் திரும்பியோர்கள் என்ற முத்திரையைக் குத்திக்கொண்டிருக்காமல் இந்தியர்களாக மாறவேண்டும்; இந்திய மக்களுக்கு குறிப்பாக கிராம மக்களுக்கு இருக்கும் உரிமைகளையும், பதவிகளையும் சலுகைகளையும் பலன்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

## விளையாட்டுகள்: விளக்கம்

இக்கருத்தரங்கம் நடைபெற மிக முக்கிய காரணமாக இருந்த சர்வதேச ஜேசு சபையின் இந்திய கிளையின் பொறுப்பாளரான பிதா குட்டினா அவர்கள் பல விளையாட்டுகள் மூலம் பல பிரச்சனைகளுக்கு விளக்கம் தந்தார்.

'வங்கிகள் இயங்கும் முறை குறித்தும், கடன் பெறுவது குறித்தும், உதவிகளை பெற நமக்கு எல்லா உரிமைகளும் உண்டு' என்று பேசினார்.

## எப்படி இயங்குவது ?

'தாயகம் திரும்பியோர் மத்தியில் அமைப்புகள் எப்படி உருவாக்குவது?' திரு ஏ. சிவானந்தன் அவர்கள் பேசினார்கள். தாயகம் திரும்பியோர்களுக்கு என்றே தனிப்பட்ட பிரச்சனைகள் இருக்கின்றன. இந்த நாட்டு மக்களுக்குள்ள பிரச்சனைகளும் தாயகம் திரும்பியோர்களுக்கு இருக்கின்றன. ஆக தாயகம் திரும்பியோர்கள் மத்தியில் பொதுவான பிரச்சனை, தனிப்பட்ட பிரச்சனை என்று இருக்கிறது. இந்த அடிப்படைகளை மனதில் கொண்டு உள்ளூர் மக்களோடு இணைந்து அமைப்புகள் கட்டவேண்டும். அப்போது தான் நமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும் என்று தெரிவித்தார்.

அன்றைய தினம், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்

(10ம் பக்கம் பார்க்க)

# 'இங்கேயும் ஜெயவர்த்தனக்கள்' கட்டுரைக்கு தாயகம் திரும்பியோர் வங்கியின் பதில் !

இங்கேயும் ஜெயவர்த்தனாக்கள் என்ற தலைப்பில் ஆகஸ்ட் இதழில் 'புதிய கலாச்சாரம்' மாத இதழில் வெளிவந்த செய்திகட்டுரையை ஆதாரமாகக் கொண்டு ஒரு கட்டுரை பிரசுரித்திருந்தோமல்லவா? இந்த கட்டுரையிலுள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி மறுப்பு தெரிவித்துள்ளது.

அம்மறுப்பை இங்கு பிரசுரிக்கிறோம்—

திரு. டி. நடராஜன், மதர்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் என்பவருக்கு அசையாத சொத்துக்களின் (மதிப்பு ரூ. 20,:4,000) ஜாமீன் பேரில் 12லட்சம் ரூபாய் தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது. இது 48 தாயகம் திரும்பியோரை கம்பளி தொழில் ஈடுபடுத்தபயன்படுகிறது. நவம்பர்82ல் இவர்கள்வேலைக்கு சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவரும் வேலையிடமான ராமபுரத்தில் புறம்போக்கு நிலத்தில் குடிசைகளில் குடியமர்த்தபட்டுள்ளனர். குடிசைகள் கட்டுமான செலவு இந்த வங்கி மற்றும் கம்பளி தொழில் உரிமையாளர்களால் பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளது.

பயிற்சி காலத்தின் போது கடன் உதவி ரூ.500-ம் உதவி தொகை மாதம் ரூ. 82-50-ம் மற்றும் இந்திய அரசாங்க விதிகளின்படி பராமரிப்பு தொகையும் இவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவர்களுக்கு ரேஷன் அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனைபட்டா மற்றும் வீடுகட்ட கடனுதவி வழங்கவும் தென்னாற்காடு மாவட்ட ஆட்சி தலைவரிடம் விண்ணப்பித்துள்ளோம்.

செயல் முறையிலுள்ள அரசு விதிகளின்படி தாயகம்திரும்பியோருக்கு வீட்டுக்கு ஒருவருக்குத்தான் நாங்கள் வேலை அளிக்க இயலும்.

கடன் பெற்றுள்ள அமைப்பு (மதர்ஸ் எக்ஸ் போர்ட்ஸ்) கடனை தவணை முறையில் 1 சதவீத வட்டியுடன் திரும்ப கட்ட வேண்டும்.

இந்த தாயகம்திரும்பியோர் எந்த காரணம் இன்றி வேலைக்கு வர மறுத்தனர். இவர்கள் ஏற்கனவே மாவட்ட ஆட்சி தலைவராலும், தொழிலாளர் அலுவலராலும் 7-5-85லும், 29-5-85லும் முறையேவேலை நிறுத்தம் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். நிர்வாகத்துக்கும், தொழிலாளர்களுக்கும் மாவட்ட ஆட்சி தலைவரின் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் நகல் இதோடு இணைக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலைகளில் நீங்கள் உங்கள் இதழில் சுமத்தி இருந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என அறியவும். எனவே உங்களின் அடுத்த இதழில் மதர்ஸ் எக்ஸ்போர்ட்ஸ், ராமபுரம் நிகழ்ச்சி பற்றி சரியான கருத்துக்களை வெளியிடுமாறு கேட்டுகொள்ளப்படுகிறீர்கள்.

இந்த மறுப்புடன் 8-5-85 அன்று மேற்படி நிர்வாகம், தொழிலாளர்கள் செய்து கொண்ட ஒப்பந்த நகல் ஒன்றையும் அனுப்பியுள்ளது. அது வருமாறு—

7-5-85 அன்று மாலை 6-00 மணியளவில் தென்னாற்காடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் முகாம் அலுவலகத்தில் ராமபுரம் மதர் எக்ஸ்போர்ட் நிறுவனத்தினருக்கும் இந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஐ.என்.டி.யு.சி அமைப்பின் நிர்வாகிகளுக்கும் இடையே மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் தொழில் சமரச கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்கண்டவர்கள் கலந்துகொண்டனர்.

திருவாளர்கள்

1. என். அசோகன்
2. என். கிருஷ்ணமூர்த்தி
3. கே. ஜேக்கப்ஸ் (மதர் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தினர்)
4. தியாகி சாமிக்கண்ணு
5. சி. கோவிந்தராஜன் (தலைவர் மதர் எக்ஸ்போர்ட்ஸ் யூனியன்)
6. இ. யு. எம். யூனூஸ் (தலைவர் ஐ. என். டி. யு. சி.)
7. கே. கரியபெருமாள் (துணைத் தலைவர் ஐ. என்.டி.யு.சி.)
8. ஏ. வி. குப்புசாமி (மாநில துணைத்தலைவர், ஐ. என்.டி.யு.சி.)
9. ஆர். எம். தாமோதர படையாச்சி, பிரசுதார், ராமபுரம்
10. ஏ. ஜோசப்
11. முத்துசாமி

கூட்டத் துவக்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இக்கூட்டம் கூட்டப்பட்டிருப்பதின் நோக்கத்தை சுருக்கமாக எடுத்துரைத்து இந்த நிறுவனம் மீண்டும் வழக்கம்போல் இயங்குவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகளை தெரிவிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார். அதனையொட்டி திருவாளர்கள் ஏ. வி. குப்புசாமி, சி.வி.கோவிந்தராஜன், இ.யு.எம். யூனூஸ், முத்துசாமி, ஜோசப் ஆகியோர் தொழிலாளர் தரப்பினை குறித்து சுருக்கமாக விளக்கினர். திருவாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி மற்றும் கே. ஜேக்கப் ஆகியோர் நிறுவனத்தின் சார்பில் தங்களது தரப்பினை எடுத்துரைத்தனர்.

அனைத்து தரப்பினர் தெரிவித்த கருத்துக்களையும் பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது ஆலோசனையை ஏற்றும் இக்கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

1) இந்நிறுவனத்தில் பணியில் சேர்ந்த 6 மாதங்களுக்கு பிறகு தொழிலாளர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படுவர் என்று தொழிலாளர்களுக்கு ஏற்கனவே தெரிவித்து இருப்பதாக திரு. கிருஷ்ணமூர்த்தி கூறினார். அதற்கொப்ப இந்நிறுவனத்தில் பணியாற்றும் அனைவரும் நிரந்தரமாக்கப்படுவர் என நிர்வாகம் ஒப்புக்கொள்கிறது. இதற்கான முறையான உத்தரவுகளை பிறப்பிக்க நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

2) நிரந்தரமாக்கப் பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் சேமிப்பு நிதி (பிராவிடண்ட் பண்டு)சந்தா தொகையினை இனி சம்பளத்திலிருந்து பிடிக்க நிர்வாகம் ஒப்புக்கொள்கிறது.

3) 21 நாட்கள் பணியாற்றினால் விதிகளின்படி ஒரு நாள் ஈட்டிய விடுப்பு என்ற கணக்கில் நிரந்தர தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு தர நிர்வாகம் ஒப்புக்கொள்கிறது.

4. தொழிலாளர் விருப்பபடி வாரத்திற்கு ஒருநாள் வாராந்திர விடுமுறை அளிக்கவும் நிர்வாகம் ஒப்புக் கொள்கிறது.

5) நிரந்தர பணியாளர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு 24 சதுர அடி என்ற கணக்கில் நெசவு வேலை முடிக்க வேண்டும் எனவும், இவ்வாறுமுடிப்பவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 300 சம்பளம் தருவது எனவும் அனைத்து தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். கூடுதலாக நெசவு செய்யப்படும் ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ. 14 என்ற விதத்தில் கூடுதல் சம்பளம் தரவும் நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

(11ம் பக்கம் பார்க்க)

# தமிழ் நாட்டில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி

## சட்டங்கள் - நோக்கங்கள் - அதிகாரங்கள் - கடமைகள்

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடந்து 15 வருடங்கள் ஆகின்றது. 1970ல் நடைபெற்றதுதான் கடைசி தேர்தல். இதுவரை தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் 6 முறை கடைசி நேரத்தில் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அடிமட்ட ஜனநாயக அமைப்புகளுக்கு பல ஆண்டுகளாக தேர்தல் நடைபெறாததால் தமிழக மேலவையில் உள்ள மொத்தம் 63 இடங்களில் உள்ளாட்சித் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 21 இடங்கள் நிரப்பப்படாமல் செயல்பட்டு வருகின்றது.

பஞ்சாயத்து தேர்தல்களை நடத்தியே தீருவோம், கட்டாயம் நடைபெறும் போன்ற அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை கேட்டு தமிழக மக்களுக்கு சலித்துப்போயிற்று. 'கிராம பஞ்சாயத்து', 'நகர பஞ்சாயத்து' 'பஞ்சாயத்து யூனியன்' என்று முன்னர் வழங்கி வந்ததை தற்போது 'ஊராட்சி' 'பேரூராட்சி', 'ஊராட்சி ஒன்றியம்' என்றும் டவுன்ஷிப் என்பதை நகரியம் என்றும் அழைக்கின்றோம்.

நாடு அரசியல் விடுதலை பெற்றபின் 1950ல் சில மாற்றங்களுடன் 'கிராமப் பஞ்சாயத்துகள் சட்டம்' இயற்றப்பட்டது. பஞ்சாயத்துக்களைப் பற்றி விரிவாக ஆராய்வதற்கென வல்வந்தராய் என்பவரின் தலைமையில் ஒரு ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டது. வல்வந்தராய்க் கமிட்டியின் பரிந்துரைக்குப் பின் 1958ம் ஆண்டு 'மதறாஸ் பஞ்சாயத்துக்கள் சட்டம் 1958 என்பது கொண்டு வரப்பட்டது. 'மதறாஸ்' என்ற வார்த்தை 1969-ல் தமிழ்நாடு என்று மாற்றம் பெற்றது. அன்று முதல் 'தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்-1958' என்றே அழைக்கப்படுகிறது. சில திருத்தங்களோடு இச்சட்டம் என்று நடைமுறையில் உள்ளது.

## அமைப்பு முறை

மூன்று வகைப்படும்.

1. ஊராட்சி
2. பேரூராட்சி
3. நகரியம் (டவுன் ஷிப்புகள்)

**ஊராட்சி :**

500க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமங்களையோ அல்லது கிராமங்களின் தொடர்ச்சியான பகுதிகளையோ கொண்டதில் ஊராட்சியினை ஏற்படுத்தலாம்.

**பேரூராட்சி:**

மக்கள் தொகை 5,000க்கு குறையாமலும், ஆண்டு வருமானம் 10,000 ரூபாய்க்கு குறையாமலும் இருக்கும் கிராமங்களையோ அல்லது அத்தகுதிகள் அமைந்துள்ள தொடர்ச்சியான கிராமங்களின் பகுதிகளை கொண்ட ஒவ்வொரு உள்ளூர் வட்டாரத்திலும் பேரூராட்சி அமைக்கலாம்.

**டவுன்ஷிப்(அ)நகரியம்**

மக்கள் தொகை 20,000க்கு குறையாததும் ஆண்டு மதிப்பு ஒரு லட்சத்திற்கு குறையாத வருவாயுள்ள நகர்புறத்திலோ தொழிலாளர் அல்லதுஆரோக்கிய வாசஸ்தலமாக இருந்தால அங்கு டவுன்ஷிப்புகளை ஏற்படுத்தலாம். டவுன்ஷிப்புகளை அமைக்கும் அதிகாரம் அரசுக்கு மட்டுமே உண்டு. டவுன்ஷிப்புகளை அமைக்க அரசரானது சட்டசபையின் ஒப்புதலைப் பெறவேண்டும். இதனை நிர்வகிக்க கமிட்டிகள் அமைப்பது, உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதுபோன்றவற்றை அரசே அவ்வப்போது நிர்ணயம் செய்யும்.

கிராம அளவில் - ஊராட்சி பேரூராட்சி என்றும், வட்டார அளவில்-ஊராட்சி ஒன்றியங்கள் என்றும், மாவட்ட அளவில்-மாவட்ட வளர்ச்சி மன்றம் என்றும் செயல்படும். ஊராட்சி ஒன்றியங்கள் என்பது கிராம அளவிலான ஊராட்சிகள், பேரூராட்சிகள் ஒருங்கிணைந்த ஒரு அமைப்பாகும். மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் என்பது ஒரு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களை ஒருங்கிணைத்த அமைப்புகளாகும்.

## தேர்தல் முறை

ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகரியத்துக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை மக்கள் தொகையின் அடிப்படையில நிர்ணயிக்கப்படுகிறது.

உதாரணமாக :

| | | |
|---|---|---|
| 600க்கு கீழே | | 5 |
| 600 முதல் 800 வரை | | 6 |
| 800 ,, | 1000 வரை | 7 |
| 10 0 ,, | 1200 ,, | 8 |

என்று தேர்ந்தெடுக்கப்படுவர்

எந்த ஒரு ஊராட்சியிலும், பேரூராட்சியிலும் மொத்த உறுப்பினர்களில் 5ல் 1 பாகத்தினர் ஆதிதிராவிடர்கள் இருக்க வேண்டும். மொத்த உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் கட்டாயம் பெண்ணாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த ஊராட்சி, பேரூராட்சிகளின் தலைவர் பதவிக்கு 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கும், 15 சதவிகிதம் பெண்களுக்கு என்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டிற்குள் வரும் பகுதிகளை அரசே தீர்மானிக்கும்.

**உறுப்பினர்கள்:**

உறுப்பினர்களையும், தலைவர்களையும் அந்தந்த ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்கள் ரகசிய ஓட்டெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், துணைத் தலைவரைப் பொறுத்தவரை உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பவர்.

**பதவிக்காலம்:**

உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்களின் பதவிக்காலம் 5 வருடங்களாகும் இதில் யார் விலக நேர்ந்தாலோ அல்லதுமரணமடைந்தாலோ காலியான பதவிக்கு என தேர்ந்தெடுக்கப்படுபவர் ஏற்கனவே அனுபவித்தகாலம் போக மீதியிருப்பதாகும்.

## போட்டியிட தகுதி

1. ஊராட்சி மற்றும் பேரூராட்சியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருப்பவர்கள் மட்டுமே உறுப்பினர், தலைவர், துணைத் தலைவர் ஆகிய பதவிகளுக்கு போட்டியிடலாம்.

2. தலைவர் தேர்தலுக்கு அல்லது உறுப்பினர் தேர்தலுக்கு என ஒருபதவிக்கு மட்டுமே ஒருவர் போட்டியிடலாம்.

3. அரசு ஊழியர்கள், குற்றவாளிகள் என தீர்மானிக்கப்பட்டவர்கள் தேர்தலில் நிற்கமுடியாது. பைத்தியக்காரர், செவிடர்

ஊமையா? தொழு நோயாளிகள், கடன் தீர்க்க முடியாதவர், ஊராட்சி மற்றும் பேரூராட்சியில் காண்டிராக்ட் எடுத்தவர்கள் தேர்தலில் நிற்க தகுதியற்றவர்களாவர்.

வேட்பாளர்கள் செலுத்த வேண்டிய டெபாசிட் தொகை :

ஊராட்சி உறுப்பினர் தேர்தலுக்கு ரூ.20

தலைவர் தேர்தலுக்கு ரூ.50

ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலுக்கு ரூ.200

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சலுகை கட்டணம் ரூ.5, ரூ.10, ரூ. 40 ஆகும்.

இத்தொகையை ஊராட்சி ஒன்றியத்தின் கருவூலத்தில் செலுத்திய ரசீதுடன் வேட்பு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

உரிமையும், கடமையும் :

உறுப்பினர்கள் தங்கள் ஊராட்சி அல்லது பேரூராட்சியின் பிரச்சினைகளை அறிந்து அதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க கோரலாம். ஊராட்சி, பேரூராட்சியின் நேரங்களுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்ட தீர்மானங்களைக் கொண்டு வரலாம். தேவைபட்டால் தலைவர்களை கூட்டங்களில் கேள்வி கேட்கலாம்.

உறுப்பினர்கள் அலுவலக நேரங்களில், ஊராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளை பார்வையிடும் உரிமை கொண்டுள்ளனர். இதனை சரியில்லை என கருதும் பட்சத்தில் தடுக்கவும் வகையுள்ளது. ஊராட்சி (அ) பேரூராட்சி கூட்டங்கள் கூடாத பட்சத்தில் அவசியமேற்படின் கூட்டங்களை கூட்டும்உரிமை பெற்றுள்ளனர்.

## நிர்வாக அலுவலர்

ஊராட்சியை பொறுத்தவரையில் அவ்வூராட்சியின் தலைவரே எல்லா பொறுப்பையும் ஏற்று நடத்த வேண்டும்.

பேரூராட்சியை நிர்வகிக்க முழுநேர நிர்வாக அலுவலரையும், அவருக்கு கொடுக்க வேண்டிய சம்பளம் மற்றும் படியையும் அரசே நிர்ணயிக்கும். நிர்வாக அலுவலர் பேரூராட்சியின் கூட்டங்களிலும், கமிட்டி கூட்டங்களிலும் கலந்து கொள்ளும் உரிமையுடையவர். ஆனால் அவர் எந்த ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரவோ, தீர்மானத்தின் மீது ஓட்டுப்போடவோ முடியாது.

கமிஷனர்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கமிஷனர் நியமிக்கப்பட வேண்டும். இவர் சாதாரணமாக சமுதாய வளர்ச்சிக்கான தேசீய விரிவாக்கப்பணித் திட்டத்தின் படி அந்தத் தொகுதிக்கு நியமிக்கப்படும் வளர்ச்சி அலுவலராகவே இருப்பார் கமிஷனர்களை தேர்வு செயவது, சம்பளம் போன்றவற்றை அரசே முடிவு செய்யும். ஊராட்சி ஒன்றியத்தின் கூட்டங்களில் கமிஷனர் கலந்து கொள்ளலாம். ஆனால் தீர்மானத்தை கொண்டுவரவோ, ஓட்டளிக்கவோ இயலாது.

## கடமைகள்

1. சாலைகள் அமைத்தல், செப்பனிடுதல்சாலையின் இருபக்கமும் மரங்களை நடுதல்.

2. பொதுமலக் கழிப்பிடம் ஏற்படுத்துதல், இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் ஏற்படுத்தி பேணுதல் கிணறு வெட்டுதல், குளம் குட்டைகளை பழுது பார்த்து பேணுதல்.

3. வானொலிப் பெட்டிக் கருவிகளும், விளையாட்டு வெளிகளும், பூங்காக்களும், உடற்பயிற்சி நிலையங்களும் ஏற்படத்துதல்.

4. மருந்தகங்கள் ஏற்படுத்துதல், தாய்சேய் நலவிடுதிகள் அமைத்தல், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் தாய்மார்களுக்கு அறிவுரையும் உதவியும் அளித்தல். தொத்து நோய், மலேரியா சம்பந்தமான தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

5. விவசாயிகளுக்கு விதைகள், பூச்சி மருத்து தெளிப்பான், தழைமிதி, டிராக்டர் போன்ற நவீன கருவிகளை வாங்கி குறைந்த வாடகைக்கு விடுதல். நிலமற்றோருக்கு புறம்போக்கு நிலங்களை பட்டா வாங்கி கொடுத்தல்.

6. வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க கைத்தொழில், குடிசைத் தொழில்களை ஆரம்பித்தல், கூட்டுறவு முறையில் பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, வியாபாரம் முதலியன செய்ய ஏற்பாடு செய்தல்.

7. பள்ளிக் கூடங்களை கட்டுதல், இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், மகளிர் மன்றங்களை அமைத்து தையற்பயிற்சி, சமையற்கலை, சுகாதார பாதுகாப்பு முறைகளை கற்றுத்தருதல்.

8. ஊராட்சி, பேரூராட்சியின் வரவு செலவு கணக்குகளை பொதுமக்களுக்கு காண்பித்தல், பொது மரங்களை ஏலமிட்டு பாலம் போன்ற வேலைகளின் மொத்த மதிப்பீட்டை பொது மக்களுக்கு காண்பித்தல். நீதியானமுறையில்பஞ்சாயத்துக்களை தீர்த்து வைத்தல்.

வருவாய்:

ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளின் பணிகளுக்கான வருவாய் இருவழிகளில் கிடைக்கிறது.

1. அரசிடமிருந்து கிடைப்பது.

2. நேரடியாக மக்களிடமிருந்து வசூலிப்பது.

மாநில அரசால் வசூலிக்கப்படும் நிலவரியின் ஒவ்வொரு ரூபாயிலும் 45 பைசாக்களை ஊராட்சி அல்லது பேரூராட்சியின் செலவினங்களுக்காக சேர்த்து வசூலிக்கிறதுஇதற்கு 'பிரதேச'வரி என்று பெயர்.

ஒரு ஊராட்சியோ அல்லது பேரூராட்சியோ மூன்று வித வரிகளை வசூலிக்கிறது.

1. வீட்டு வரி, தொழில் வரி வாகன வரி.

2. சொத்து பரிமாற்றத்தின் மீது தீர்வை.

3. விவசாய நிலத்தின் மீது வரி.

இந்த வரி வசூலிப்பின் மூலமும் தனக்கு தேவையான வருவாயை பெருக்கிக் கொள்கின்றது.

## எச்சரிக்கை

1. அரசியல் கட்சிகளே நேரடியாக போட்டியிட்டால் கிராம, வட்டார அளவில் கட்சிக் கொடிகளைக் கட்டுக் கொண்டு திரிகிற வர்களெல்லாம் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் உருமாறுவார்கள்.

2. சாதிச் சனியன்கள் தலைவிரித்தாடும். மேட்டுக் குடித்தனக்காரர்களின் அட்டகாசங்கள்பெருகும்.

3. ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் மத்திய மாநில அரசுகளின் கட்டுப்பாடுகளை மீறமுடியாத அளவில் செயல்படும். அரசின் ஒழுங்கீனங்களை மக்கள் நேரடியாக உணர்ந்து கொள்ள தலைவர்கள் உதவுவார்கள்.

4. இன்றைய இந்தியச் சூழலில் கிராமப்புறங்களை பற்றி யாரும் அதிக கவலைப்படப்போவதில்லை. முதலாளித்துவப் பாதை 15ம் பக்கம் பார்க்க

# மக்கள் மறுவாழ்வு மன்றம்

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, வெஸ்ட் புருக்கில் நடைபெற்ற (29.8.85—7.9.85) கருத்தரங்கில் கலந்து கொண்ட தாயகம் திரும்பிய இளைஞர்கள் 'மக்கள் மறுவாழ்வு மன்றம்' என்ற பெயரில் மன்றம் ஒன்றை அமைக்க ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.

தாயகம் திரும்பியோர் குடியேறியுள்ள குடியிருப்புகளிலும், கிராமங்களிலும் இம்மன்றத்தை அமைத்து பல நற்பணிகளை செய்வதென முடிவு செய்துள்ளனர்.

இம்மன்றம் முதல்கட்ட பணிகளாக பின்வரும் பணிகளை செய்வதென தீர்மானித்துள்ளது—


கற்றுப்புற சுகாதாரம், குழந்தைகள் கல்வி நிலையம், முதியோர் கல்வி நிலையம், படிப்பகம், விளையாட்டு மைதானம் அமைத்தல், குழந்தைகள் பராமரிப்பு, விழாக்கள் வைபவங்களை பொறுப்பேற்றல், திருமணம், மரணம் போன்ற தனியார் விசேடங்களில் பங்கு கொண்டு உதவுதல், இரண்டரை வயதுக்குட்பட்ட குழந்தைகள் காப்பகம் அமைத்தல் வயோதிபர், நோயாளிகளை கவனித்தல் முதலான பணிகளில் ஈடுபடுவதென முடிவு செய்துள்ளது.

மன்றம் அமைக்க 11 பேர் கொண்ட ஒரு அமைப்பு குழுவினை நியமித்துள்ளனர். திரு சாந்த கிருஷ்ணன் அவர்களை முதன்மையாகக்கொண்டு பின்வருவோர் அக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்: திருவாளர்கள் பி. சின்னையா, ஐ. ஞானப்பிரகாசம், ல. சீனிவாசன், வி. ஜி. தட்சணாமூர்த்தி, ஈ. முனிரத்தினம், ஏ. மணி, எம். செல்வராஜ், ஆர். வி. நவரட்னம், ஆர். கணேஷன், டி. துரைராஜ் ஆகியோராவர்.

ஒவ்வொரு இடத்திலும் மன்றம் அமைக்கவும் - மேற்படிகளை செய்யவும் நற்பணிக் குழுக்கள் அமைக்கப்படும்.

மன்றத்தின் அமைப்புத் திட்டம் பற்றியும், அதன் செயற்பாடு குறித்தும் அமைப்புக் குழு தீர்மானமெடுக்கும்.

இக்குழு மாதம் ஒருமுறை கூடும். ○



○ ஊக்குனர்கள் தயாரித்து நடித்த நாடகத்தில் ஒரு காட்சி.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வியின் தாயகம் திரும்பியோர் சார்பு இயக்குனர் திரு. எம். ஆர். லிங்கம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

## மத்திய, மாநில அரசுகள்

அவர் தாயகம் திரும்பியோர்களின் தொழிற் வாய்ப்பு பிரச்சனைகள் குறித்து பேசியதோடு, தாயகம் திரும்பியோர் விஷயத்தில் மத்திய அரசு எப்படி நடந்துகொள்கிறது மாநில அரசு எப்படி நடந்து கொள்கிறது என்பது பற்றி தனது கருத்துக்களை தெரிவித்தார்.

மத்திய அரசு தாயகம் திரும்புவோர்களுக்காக நிதி ஒதுக்குகிறது; பல திட்டங்களைப் போட தயாராக இருக்கிறது. ஆனால் மாநில அரசு எல்லாவற்றிற்குமே முட்டுக்கட்டையாக இருக்கிறதுஎன்று தெரிவித்தார் மாநில அரசை பொறுத்தவரை தாயகம் திரும்பியோர் விஷயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையில்தான் நடந்து கொள்கிறது என்று பல உதாரணங்களை எடுத்துக் காட்டினார்.

## கூட்டுறவு மூலம் மேம்பாடு

கூட்டுறவின் அவசியம் குறித்தும், கூட்டுறவு அடிப்படையில் தாயகம் திரும்பியோர் எப்படி பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளலாம் என்பதுகுறித்து திரு டி. பாலகிருஷ்ணன் விளக்கங்கள் கொடுத்தார்.

கருத்தரங்கம் முடிவுறும் முதல் நாள், திரு. ஆர். ஆர். சிவலிங்கம் தாயகம் திரும்பியோர் மத்தியில் ஊக்குனர்கள் எடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கை பற்றி விளக்கினார்.

'பெரிய வட்டம் சிறிய வட்டங்கள் என்று, வட்டங்களுக்குள் வட்டங்களாக-ாக வும் சிறுபான்மையினர்போல், குழந்தைகள், பெண்கள் முதியோர் சமுகத்தில் ஒதுக்கப்பட்டே வருகிறார்கள்' என்றும் அவர்கள் சமுகத்தில் கவனிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து திரு. திருச்செந்தூரன் அவர்கள் வலியுறுத்தினார்.

பத்து தினங்கள் நடைபெற்ற இக்கருத்தரங்குபயிற்சி முகாமை தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு ஆயவு, தகவல் மையம் சர்வதேச ஜேசு சபையின் இந்திய கிளையின் துணையுடன் நடந்தியது.

## கலை நிகழ்ச்சிகள்

இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட ஊக்குனர்கள் தாயகம் திரும்பியோர் பிரச்சனைகள் புரிந்து கொண்டு, அதற்கு தீர்வு காண வேண்டிய வழிகள் குறித்தும் அறிந்து கொண்டு தமது எதிர்கால எண்ணங்களை பாட்டு, நாடகங்கள் மூலம் காட்டினார். தாயகம் திரும்பியோர் பிரச்சனைகளை அப்படியே தாங்களே பாடல்களாக பாடியும், நாடகங்களாக நடத்தியும் காட்டினர்.

## பொதுக்கூட்டம்

இதில் கலந்து கொண்ட ஊக்குனர் இறுதிநாள் அன்று தாமே ஒரு பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்தனர். அதில் பலர் பேசினார்கள். □


# தேவை

## மணமகள்தேவை

சமுக சேவா நிறுவனமென்றில் பணிசெய்யும்—வருமானமுள்ள 24வயது, ஆதிதிராவிட இளைஞருக்கு மணமகள் தேவை. மணமகள் படித்தவரும், இவருடன் இணைந்து பணிசெய்யக் கூடியவராகவும் இருக்க வேண்டும்

எழுதவும்:
வி. எஸ். 2,
மக்கள் மறுவாழ்வு,
சென்னை-600094.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

) இத்தொழிலாளர்கள் தற்போதைய போராட்டத்தின் காரணமாக வேலையிலிருந்து நின்றுவிட்ட நாட்களுக்கான சம்பளத்தை கொடுக்க (சுமார் ரூ. 70) நிர்வாகம் ஒப்புக்கொண்டது. இச் சம்பளத்தை மே மாத சம்பளத்துடன் சேர்த்து ஜூன் மாதத்தில் கொடுக்கவும் நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

7) ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் 14-5-85 அன்று நிறுவனத்தினரால் கொடுக்கப்படும்.

8) நிர்வாகத்தினராலும், தொழிலாளர்களாலும் புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டு காவல் நிலையத்தில் பதிவாகி தற்போது விசாரணையில் உள்ள வழக்குகள் அனைத்தும் உடனடியாக திரும்பப் பெற இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

மேலே கண்ட முடிவுகளை ஏற்றுக்கொண்டு தொழிற்சாலையை 8-5-85 அன்று காலை 8-00 மணிக்கு மீண்டும் திறப்பதற்கு நிர்வாகமும் இச்சமயத்தில் வேலைக்கு செல்வதற்கு தொழிலாளர்களும் ஒருமனதாக முன்வந்தனர்.

### ...கள் கருத்து

தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் வங்கி பல நிறுவனங்களுக்கு கடனுதவி அளிக்கிறது; நல்வாழ்விற்காக பலதிட்டங்களை போட்டு பாடுபடுவதை நாம் மறுக்க முடியாது. ஆனால் வங்கி கடன் வழங்குவதில் அளிக்கும் சலுகைகளை இவைகள் பயன்படுத்திக் கொள்கின்றன; ஆனால் அவை கடனையும், சலுகைகளையும் மட்டுமே மனதில் கொள்கின்றனவே தவிர யாருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறதோ அவர்களின் நலன்களை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. உரிமைகள் மறுத்தல்—வேலை உத்தரவாதமின்மை, சம்பள மறுப்பு, கொடுமைகள் இழைத்தல் போன்ற பிரச்சனைகளைத் தாயகம் திரும்பிய தொழிலாளர் மீது கட்டவிழ்த்துவிடுவதை நாம் மறுக்க முடியாது. ○

# தாயகம் திரும்ப வேண்டியவர்

1984 டிசம்பரில் தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்படும் வரை 1,20,000 குடும்பங்களை சேர்ந்த சுமார் 4,50,000 பேர் தாயகம் திரும்பியுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தத்தின் படி தாயகம் திரும்ப வேண்டியோரின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சம், மக்கள் அதிகரிப்பு சுமார் ஆண்டுக்கு 2 விழுக்காடு என்றும் தாயகம் திரும்புவோர் விகிதம் ஆண்டுக்கு 4 விதம் என்றும் கொண்டால், இன்னும் தாயகம் திரும்பவேண்டியோரின் எண்ணிக்கை சுமார் 4லட்சம். நாளை இங்கே அவர்கள் மறுவாழ்வுப்பற்றி எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் எவை?

1976-ல் பொருளாதார-நுட்ப கழகம் நடத்திய ஓர் ஆய்வின்படி தாயகம் திரும்பியோர்களில் 50 முதல் 60 விழுக்காடு மக்கள் இந்தியாவில் ஓரளவு நிலையான இருப்பு உள்ளவர்களாக இருந்தனர். நிலங்கள் மற்றும் இதர சொத்துக்கள் உள்ளவர்களாக இருந்தனர். இவர்கள் யாவரும் இந்த நூற்றாண்டின் முதல் 50 வருடங்களில் இலங்கைக்கு சென்றவர்கள். ஆனால் இப்போது சமீபத்தில் தாயகம் திரும்புவோர் கணக்கில் இந்த விழுக்காடு மிகவும் குறைவு. இதிலிருந்து இந்தியாவில் ஓரளவு வாய்ப்பு வசதிகள் இருந்தவர்கள் முதலியே இந்தியாவில் குடியேறிவிட்டனர் என்று தெளிவாகிறது.

இனி தாயகம் திரும்ப வேண்டிய பெரும்பாலோர் இலங்கையில் குடியுரிமைக்கு விண்ணப்பித்து, குடியுரிமை மறுக்கப்பட்டவர்கள்.

பொருளாதார நுட்ப கழகத்தின் ஆய்வின்போது முதலில் தாயகம் திரும்பியோரில் பெரும்பாலோர் ஏன் இந்திய அரசை உதவிக்காக நாடவில்லை என்பது பெரும்புதிராக இருந்தது. ஆனால் முழு ஆய்வு அவர்களுக்கு உள்ள வாய்ப்பு வசதிகளை சுட்டி காட்டியது. பெரும்பாலோர், நில உடமைகள் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால் நாளை தாயகம் திரும்ப உள்ளவர்கள் எந்த வித வசதிகளும் இந்தியாவில் இல்லாதவர்கள்.

எனினும் முன்னவர்களுக்கு கிடைக்காத சில அனுகூலங்கள் இனி தாயகம் திரும்பப்போகிறவர்களுக்கு உள்ளன. இந்த 15 ஆண்டுகளாக தாயகம் திரும்பியோருடன் கடித தொடர்பு வைத்து கொள்ள வாய்ப்பு உண்டு. இதனால் சரியானவில் தேர்ந்தெடுக்க வாய்ப்புண்டு. 1970-ஆம் ஆண்டுகளில் இவ்வாய்ப்பு கிடையாமையால், அம்மக்கள் தம் சொந்த கிராமங்களுக்கு சென்று பல் வேறு மக்களால் - குறிப்பாக உறவினர்களால் சுரண்டப்பட்டனர். அதன் பிறகே பிழைப்பு தேடி மற்ற இடங்களுக்கு

**ஓர் ஆய்வாளர்**

குறிப்பாக மலை பிரதேசங்களுக்கு சென்றனர். நீலகிரியில் குடியமர்ந்துள்ள இலங்கை மக்களில் 50 விதம் மக்கள் வேறு மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களே என ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. மண்டப முகாம் துணை-வட்டாட்சியர் 1984ல் தந்த கணக்குபடி, வியாபார கடன் பெற்ற இருபது பேர்களில் 18 பேர்கள் நீலகிரிக்கு குடியமர செல்கின்றனர். இதிலிருந்து முன்போல் தங்கள் கிராமங்களுக்கு செல்லாமல் நேரிடையாக மக்கள் மலையிடங்களுக்கு செல்வது புலனாகிறது.

மத்திய அரசோ, தமிழ்நாடு அரசோ தாயகம் திரும்ப போகிறவர்களுக்கு ஒரு உருப்படியான காரியத்தையும திட்டமிடவில்லை. வால்பாறையில் ஒரு தேயிலை தோட்டம் போட திட்டமிட்டிருப்பதை தவிர பெரும்பான்மையோருக்கு ரூ.3,000 கடன் வசதி கிடைக்கலாம். மிக சிலருக்கு கூட்டுறவு தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கலாம். மற்றவர்கள் (கடன் பெற்றவர்கள் உள்பட) தங்கள் வாழ்க்கையை தாங்களே அமைத்து கொள்ள வேண்டிய நிலையுள்ளது. இதில் அரசு அலுவலர்கள் உதவி பணி மிக அவசியம் தாயகம் திரும்புவோரை தகுந்த இடங்களுக்கு அனுப்புவதில் முடிந்த அளவு அலுவலர்கள் சிரத்தையுடன் செய்து வந்திருக்கிறார்கள். மறுவாழ்வு உதவிக்களுக்கான ஏற்பாட்டையையும் சிரத்தையுடன் செய்கின்றார்கள். இருந்தாலும் அலுவலர்களின் மிகசிறிய சிரத்தையுடன்கூடிய ஒருங்கிணைந்த பணி மிக அவசியம்.

மைத்திரி மற்றும் சிராக் போன்ற தொண்டு ஸ்தாபனங்களும் பல வகையான தகவல்களை தந்து சிறப்புமிக்க பணியாற்றி வருகின்றன. இந்த அமைப்புகளின் முயற்சிகளை தாயகம்திரும்பியோர் புரிந்து கொள்ள சிறிது காலம் பிடிக்கிறது. எனவே பணிகளை துரிதபடுத்த முயற்சிகள் நடக்கின்றன.

தாயகம் திரும்புவோர்களுக்கு மட்டும் அல்ல, திரும்பியோருக்கும் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும், இவர்கள் மனம் உடைந்து போகாதபடி புதிய திட்டங்களை அரசு இயற்ற வேண்டும். பெண்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்க பயிற்சி வசதிகள் செய்து தரல் வேண்டும் முதலில் படித்த பெண்க்ள் மற்றும் வேலை வாய்ப்பு தேடும் பெண்கள் பற்றி சரியான கணக்கெடுப்பு தேவை. இதிலும் அரசு அலுவலர்களின் பணி மிக முக்கியம்.

அரசு அலுவலர்களின் பணி முன்னைவிட இப்போது மிக அவசியம். ஏனெனில் 1970ல் தாயகம் திரும்பியோருக்கு இங்கு உடமைகளும் வாய்ப்புகளும் இருந்தன. ஆனால் மறுவாழ்வுக்கான தேவை அதிகம் இல்லை. பல அரசாங்க திட்டங்கள் தோல்வியடைந்திருந்தாலும் நாடு திரும்புவோரை கவரகூடிய திட்டங்களை அரசு இயற்றுதல் மிக அவசியம்.




## எங்கள் பிரச்சனைகள்

இலங்கையின் இன கலவரத்தினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரையாவது காப்பாற்றிக் கொள்வோம் என்ற நம்பிக்கையில் தமிழகம் ஓடி வருகிறோம். தமிழ் நாட்டில் எங்களுக்கு சிறப்பாக வரவேற்பு அளிக்கப்பட்டு கௌரவத்துடன் நடத்தப்படுவதாக அரசியல் மேடைகளிலும் எல்லா பத்திரிகையிலும் பரவலாக செய்திகள் வருகின்றன. ஆனால் எங்களுக்கு மண்டபம் முகாமில் அரசு நிர்வாகத்தினரால் நடத்தப்படும் கொடுமைகளை பார்க்கும்போது சிங்கள வெறியர்கள் கையிலே செத்திருக்கலாம் போல் தோன்றுகிறது. மண்டபம் முகாமில் எனது தகப்பனாரை போலிசாரால் தாக்கப்பட்டு சீர்காழி முகாமுக்கு பலாத்காரமாக அனுப்பியிருக்கிறார்கள் நிர்வாகத்தினர். இதே நிலை பல அகதிகளுக்கு ஏற்பட்டுள்ளன. மண்டபம் முகாம் துணை ஆட்சியாளர் அவர்களும் தாசில்தார் அவர்களும் திமிர்தனமாக பேச ஆரம்பித்து விட்டார்கள். இவர்களுடைய அராஜக போக்கு உச்சகட்டத்தை அடைந்து உங்களால் என்ன செய்ய முடியும். முடிந்ததை செய்யுங்கள் என்று அகதிகளை இழிவான வார்த்தைகளில் ஏசுகிறார்.

இந்த முகாமில் நடப்பவைகளை பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தால் சம்பந்தபட்டவர்கள் மிரட்டப்படுகிறார்கள். மற்றும் மண்டபம் முகாமில் நாங்கள் சுவாசிப்பதுகூட நிர்வாகத்தினர் அனுமதியின்றி முடியாது. இந்த அதிகாரிகளின்செயல் இந்திய அரசுக்கே துரோகம் விளைவிப்பதாகும். முகாமில் நடக்கும் பிரச்சனைகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் தமிழக அமைச்சர்களுக்கும் மனுக்கள் மூலமாகவும் நேரிடையாகவும் பிரச்சனைகளை தெரியப்படுத்தி இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த கடிதத்தை நான் எழுதுவதால் அதிகாரிகளால் பழிவாங்கப்படலாம் என்றாலும் தமிழக மக்களுக்கும், இந்திய அரசுக்கும் நாங்கள் நடத்தப்படும் முறை தெரிய வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறேன்.

தயவுசெய்து உங்கள் பத்திரிகையில் இந்த கடிதத்தை பிரசுரிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இதை நீங்கள் பிரசுரித்தால் உங்கள் பத்திரிகைக்கு எமது மக்கள் (இலங்கை மக்கள்) நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

**சிறிதர்**

திருச்சி.

□

## நற்சேவைக்கு பாராட்டு

தாயகம் திரும்பியோர், அகதிகள் மத்தியில் இருக்கும் அனைத்து பிரச்சினைகளையும் சுமந்து மாதம் ஒரு முறை தமிழகமெங்கும் வலம்வரும் 'மக்கள் மறுவாழ்வுக்கு' எனது நன்றிகள் !

தங்களின் சேவைகள் தொடரவும், தொடர்ந்து மக்களுக்கு நல்சேவையை ஆற்றவும் எனது வாழ்த்துக்கள்!

''தாயகம் திரும்பிய அகதிகள்' என்ற எனது ஆக்கத்தை தங்கள் இதழில் பிரசுரித்து அகதிகள் மத்தியில் இருக்கும் பிரச்சினைகளை அனைவரும் அறிய வழிவகுத்த தங்களுக்கு அகதிகள் சார்பாகவும் நன்றிகளை கூறிக் கொள்கிறேன்.

அகதிகள் மத்தியில் உள்ள இன்னொரு பிரச்சினையை 'நாங்கள் யார்?' என்ற தலைப்பில் இத்துடன் இணைத்துள்ளேன். இதனை பிரசுரிப்பதுடன், தொடர்ந்தும் அகதிகள், தாயகம் திரும்பியோர்கள் சம்பந்தமான பல விஷயங்களை வெளிக்கொணர வாய்ப்பளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நன்றி!

**'நாடக நித்தலம்'**

திருச்சி.

## நல்ல வழிகாட்டி

தங்களது மக்கள் மறுவாழ்வு பத்திரிகை தாயகம் திரும்பியோருக்கு மட்டுமில்லாமல் அகதிகளாகவும் ஏனைய நாடுகளிலிருந்து வந்த மக்களுக்கும் வழிகாட்டியாக மட்டுமல்லாமல் அறியாத மக்களை தெளிவுறச் செய்யவும் மிகமிக அவசியம் தேவைப்படுகிறது. குறிப்பாக சொல்லப்போனால் தாயகம் திரும்பியோருக்கு மக்கள் மறுவாழ்வு பத்திரிகை பெரியதொரு 'வரப்பிரசாதம்' என்றே கூறலாம்.

நான் கடந்த 8 வருட காலத்துக்கு மேலாக யு.எப்.எப்.ஆர்.ல் தலைவராக இருந்து இங்குள்ள தாயகம் திரும்பிய எல்லா மக்களுக்கும் சமூக மற்றும், தொழில் போன்ற விஷயங்களில் ஈடுபட்டு செயலாற்றி வருகிறேன் தாங்கள் எனக்கு தவறாமல் அனுப்பி வருவதற்கு உங்களுக்கும், உங்களை சார்ந்தோருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களது பத்திரிகையில் தாயகம் திரும்பியோருக்கு கிடைக்கக் கூடிய சலுகைகள், மற்றும் வேலை வாய்ப்பு விஷயங்களை அதிகப்படுத்தினால் மக்கள் மறு வாழ்வு பத்திரிகை மேலும் விற்பனை அதிகமாகும் என்ற எனது சிறிய அபிப்பிராயத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**முருகன்**

வேலூர்

## நன்றி மலர்கள்

கற்பனைகளை சுமந்து கடல்தாண்டி வந்து......கற்பனைகள் சுக்கு நூறாக்கப்பட்ட போதும் அடைக்கலம் கேட்ட போது 'அகதி' என்று அடித்த போதும், உண்மையிலேயே தங்கள் இதழ் ஆதரவு தருகின்றது. அரவணைக்கின்றது. எங்கள் வாழ்விற்கு வழியும் சொல்கின்றது.

கன்னட கலை பயிலும் என் போன்ற மாணவர்களின் இதய குமுறலை. திருமதி. ஆர். கே. வேணி அவர்கள் ஆழமான அழகோடு எடுத்து காட்டியது பாராட்டுக்குரியது கண்ணீருக்கு மேடை தந்த தங்கள் இதழுக்கு மௌனமாக நன்றி மலர்களை சூட்டுகிறேன்.

**கே. கணேஷ்குமார்**

சுப்ரமணியா ரப்பர் டிவிசன்
கர்நாடகம்.

□

## பயனுள்ள பகுதி

தாயகம் திரும்பியவர்களின் அவல நிலையை 'மக்கள் மறுவாழ்வு' மூலம் எடுத்து வெளி உலகிற்கு தெரியப்படுத்துவதற்கு நன்று.

'வேலை வாய்ப்பு' பகுதி எல்லோருக்கும் பயன் உள்ளதாக உள்ளது. பிரசுரித்த உங்களுக்கு வாழ்த்துக்கள்.

**எஸ். கலைச் செல்வன்**

தட்டப்பள்ளம்

# சுள்ளியா தமிழ்ச் சங்கம் கூறுகிறது

மக்கள் மறுவாழ்வு செப்டம்பர் இதழில் 'சென்றவிடமெல்லாம்' என்ற தலைப்பில் சகோதரி ஆர். கே. வேணி எழுதிய கட்டுரையை கண்ணுற்றேன். தமிழின் பால் அவருக்கிருக்கும் ஆர்வத்தையும் பற்றையும் கண்டு மனம் மிக ஆனந்தமடைகிறது.

அதே வேளையில், கட்டுரையாளர் தமிழ்ச் சங்கத்தையும், தொழிற் சங்கங்களையும், கல்வி இலாகாவையும் மட்டுமே பொறுப்பற்று சாடி இருப்பது வருந்தத்தக்கது. முறைமாடுகளை குறிப்பிடும் போது ஆழ்ந்து சிந்தித்து குறிப்பிடவேண்டும். யாரால்? யாருக்கு? எப்போது? குறை ஏற்பட்டது என்பதை ஒளிவு மறைவின்றி தெள்ளத் தெளிவாக குறிப்பிடவேண்டும்,என்பது மரபு. இதில் தவறு செய்தவர்களை காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்படக் கூடாது. நீதி, நியாயத்தை எதிர்பார்த்தால் மேற்படி நடக்கவேண்டியது நியாயமே யாரையாவது மனதில் வைத்துக் கொண்டு குறை கூற வேண்டும் என்று கருதினால் குறைகள் தீர்க்கப்பட போவதில்லை, பதிலாக குழப்பம் தான் ஏற்படும் என்பதை கட்டுரையாளருக்கு தொயாதா?

கட்டுரையில் எழுபத்தைந்து விழுக்காடு மாணவர்களுக்கு தமிழே தெரியாது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் சுமார் பத்து தமிழ் ஆசிரியர்கள் பணிபுரிந்து வருவதாகவும் குறிப்பிடுகிறார். இவ்வாசிரியர்களளில் சிலர் பத்து பன்னிரண்டு ஆண்டு காலமாக பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஆகவே, இத்தனை காலம், இத்தனை தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு எதை போதித்தனர். சம்பளம் எப்படி? எதற்காக பெற்று வந்தனர். தமிழ் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட இவர்கள் தமிழுக்கு இத்தனை காலம் ஆற்றிய தொண்டுதான் என்ன? இதைப் பற்றி சிறிதேனும் சிந்தித்தார்களா? கட்டுரையாளர் தெரிவிப்பாரா?

கடந்த 8-8-1985 அன்று தமிழாசிரியர்களின் சார்பாக திரு. ஜி. எம். நாராயணசாமி தமிழ் ஆசிரியர் அவர்கள் ஒரு விண்ணப்பத்தை கையளித்தார். (அதன் பிரதி ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன்) இந்த குறுகிய கால கட்டத்தில் இந்த பாரத தேசத்தில் எதைதான் சாதிக்க முடியும்? மற்றொன்றையும் கவனிக்க வேண்டும் இத்தனை சீக்ஸரத்தில் மக்கள் மறுவாழ்வு செப்டம்பர் இதழும் வெளிவருகிறது. இது எப்படி இருக்கு? ஆச்சரியமாக இல்லை. இதை கண்ணுனும் போது எமது சங்கங்களை களங்கப்படுத்துவதற்காக வே எழுதியதாக தோன்றுகிறது.

கல்வி இலாகாவிற்கு இது நாள் வரையில் இவ்வாசிரியர்கள் எழுத்து மூலம் முறையீடு செய்ததாக தெரியவில்லை. முறைப்படி யாருக்கு தெரியவில்லையா? அதுவும் பத்து பன்னிரண்டு வருட காலம் பணிபுரிந்து வந்தவர்கள் ஏன் செய்யவில்லை? கட்டுரையாளர் ஏன் இந்த வினாவை எழுப்ப தவறிவிட்டார். சங்கங்களுக்கு விண்ணப்பம் கொடுத்த ஒரு சில நாட்களில் நடவடிக்கைதான் எடுக்க முடியுமா?

மேற்கண்ட கருத்துக்களை வைத்துப் பார்க்காமல் கட்டுரையில் பல உண்மைகள் இருந்தாலும், குற்றவாளிகள் யார் என்று தெரிந்தும் ஏதோ ஒரு வகையில் கட்டுரையாளர் ஆசிரியர்களை காப்பாற்ற முயற்சிகள் எடுத்துள்ளார் என்பது தெள்ளத் தெளிவு. ஆக'அவலை நினைத்து உரலை இடிப்பதுபோல'உண்மையை சரிவர புரிந்து பாரபச்சமற்ற முறையில் எழுதும் படி வேண்டுகிறேன்.

எனவே தமிழ்ச் சங்கத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை துடைக்கும் வகையிலும் உண்மையை மற்றவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் இதை பிரசுரிக்குமாறு தமிழ்ச் சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**எஸ்.டி.அமிர்தலிங்கம்**

அவர் அனுப்பிய கடிதத்தின் நகல்:

பெறுநர்:
எஸ்.டி. அமிர்தலிங்கம்,
(பொதுச் செயலாளர்)
தமிழ்ச் சங்கம் அலுவலகம்
சோனன்கிரி அஞ்சல்
சோனன் கிரி

அனுப்புனர்:
ஜி.எம். நாராயணசாமி
(தமிழாசிரியர்)
சோனன்கிரி அஞ்சல்
அன்புடையீர்!

பொருள்: தமிழ் மொழி வளர்ச்சிபற்றி

கடந்த 4-8-1985 அன்று சுள்ளியாபுத்தூர் வட்டங்களிலும் கர்நாடக அரசு பள்ளிகளிலும் கே. ஆர். பி. சி. லிமிடெட்டில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்களின் கருத்துகள் ஆராயப்பட்டன. பாடசாலைகளில் தமிழ் பேதிப்பதில் ஏற்படும் கடைகள், இலவச பாடநூல் வினியோகம், தமிழ் பயிலும் மாணவர்களுக் கேற்படும் சுமை. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களிடம் இருக்கும் தமிழ் அறிவு ஆற்றல் இவைகளைப் பற்றி விரிவாக ஆராயப்பட்டு இந்தக் குறைபாடுகளை எதிர் வரும் 12-8-1985 திங்களன்று சுள்ளிலாவில் நடைபெறவுள்ள ஈழப்பேராளிகளுக்கு நன்கொடை கையளிப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கும் சகல தொழிற்சங்க பிரமுகர்க்கும் தமிழ்ச் சங்க பிரமுகர்களுக்கும் மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் அடங்கிய கோரிக்கைமனு அவர்களின் முன் வைக்கப்பட்டு கர்நாடக அரசு நீதியிலான (கல்வி இலாகா) நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என தாழ்மையுடன் விண்ணப்பிக்கும் தமிழ் ஆசிரியர்கள் குழு. நன்றி. வணக்கம்.

**ஜி.எம்.நாராயணசாமி**
சோனன்கிரி

# வேலை வாய்ப்பு தகவல்

## TNPSC IV GROUP

### தமிழ்நாடு அரசு பணியாளர் பதவிக்கான விண்ணப்பங்களை கோருகிறது

மொத்த காலியிடங்கள் : 3,000

தகுதி : எஸ்.எஸ்.எல்.சி.

சம்பள விகிதம் : மாதாந்திர சம்பளம் ரூ. 610-20-730-25-955-30-1075- பட்டதாரிகளுக்கு ரூ. 650 முதல் தொடக்கம்.

தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு நிதி அமைச்சர் பணிகளில் இளநிலை உதவியாளர்கள். ஊர் நல அலுவலர் நிலை 2 மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் காசாளர், தமிழ்நாடு நில அளவை மற்றும் நில பதிவுருக்கள் சார்நிலைப் பணியில் நில அளவர் மற்றும் வரைவர், தமிழ் நாடு அமைச்சுப் பணி, நீதி அமைச்சுப் பணி, தமிழ்நாடு சட்டமன்ற மேலைச் செயலக, சட்டமன்ற பேரவைச் செயலக மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலக பணிகளில் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்தருக்கான பதவிகளில் நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கடைசி தேதி: பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 7-10-85க்குள் டி என் பி எஸ் ஸி அலுவலகத்திற்கு கிடைக்க வேண்டும்.

முகவரி : செயலாளர்
தமிழ் நாடு அரசு பணியாளர்
தேர்வாணைக்குழு
அரசினர் தோட்டம்
சென்னை-600 002

அனைத்து விபரங்களையும் செப்டம்பர் மாதம் இரண்டாவது வார ஆங்கில, தமிழ் நாளிதழ்களில் காணலாம்.

# உங்களுக்கு தகுந்த ஒரு தொழிலை தேர்ந்தெடுங்கள்

ஒப்பந்த அடிப்படையிலும் அகதிகளாகவும் இந்தியா திரும்பும் மக்கள் இங்கு அரசின் மறுவாழ்வு மூலமோ, சுயமாகவோ தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். தமது பிழைப்புக்கும், பொருளாதார உயர்வுக்கும் பலதரப்பட்ட தொழில்களை செய்ய முன் வருகிறார்கள்.

ஆனால், முன் அனுபவம் இல்லாததாலும், எதை செய்வது என்று தெரியாமலும் தடுமாறுகிறார்கள்.

இவர்கள் செய்வதற்கு எத்தனையோ தொழில்கள் உண்டு மிக மிக சிறிய முதலீடு கொண்டும் இத்தொழில்களை செய்யலாம்.

தாயகம் திரும்பும் மக்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் வியாபாரக்கடன் பெற்று என்னென்ன வகையான தொழில்களையெல்லாம் செய்யலாம் என்று 55 வகையான வியாபாரம், தொழில்களை வரையரை செய்து வைத்திருக்கிறது. அரசாணையிலுள்ள அந்த தொழிற்பட்டியலை இங்கு தருகிறோம்.

1 வெங்கல, செப்புப் பாத்திரக் கடை, 2 பிரட், பிஸ்கட் தயாரித்தல், 3 பால்பண்ணை வகைப் பொருட்கள் கடை, 4 முட்டை கடை, 5 பழக்கடை 6 அலுமினியப் பாத்திரம்தயாரித்தல், 7 பலசரக்கு கடை, 8 வெற்றிலை, பாக்கு மற்றும் குளிர்பானக் கடை, 9 தேநீர் கடை, 10 எண்ணெய்கடை, 11 வளையல்கடை, 12 சைக்கிள் கடை, 13 பிரம்பு பொருட்கள் தயாரித்தல், 14 பட்டன் தயாரித்தல், 15 இரும்புக் கடை.

16 பேணா பழுதுபார்த்தல், விற்பனை செய்தல், 17 மின் சாரப் பொருட்கள் விற்பனை, 18 ரெடிமேட் விற்பனை மற்றும் தையல்கடை, 19 மூக்குப் பொடிக்கடை, 20 மண்ணெண்ணெய் விற்பனை, 21 காய்கறி விற்பனை, 22 பிளாஸ்டிக் சம்பந்தப்பட்ட பொருட்கள் விற்பனை, 23 சாப்பாட்டுக்கடை 24 எழுத்துப் பொருள், விற்பனை, 25 ஜாதிக்காய்பெட்டி செய்தல், 26 எம்பிராய்டரி (தையல்) வேலை, 27 வீட்டுத் தளவாட விற்பனை, 28 யூனானி வைத்தியம் கற்றல், 29 தட்டச்சு, 30 விறகுக் கடை.

31 கரி வியாபாரம், 32 ஒட்டுப்பலகை வியாபாரம், 33 ரோஸ்வூட் வியாபாரம், 34 கடிகாரம் பழுதுபார்த்தல், 35 சுவர்க்கடிகாரம் விற்பனைக் கடை, 36 பாதணி கடை, 37 மளிகை அல்லது மளிகையும் அழகு சாதன வியாபாரமும், 38 எவர்சில்வர் பாத்திரம் தயாரித்தல், 39 தையல்கடை, 40 பேப்பர் (அச்சிடும் தாள்) வியாபாரம்.

41 பத்திரிகை விற்பனை, 42 காப்பி(க்கொட்டை) வியாபாரம், 43 பால்டிப்போ, 44 45 கணக்குப் பதிவேடு, எழுத்துப் பொருட்கள் மற்றும் புத்தக பைண்டிங்கடை

46 வண்டியும் மாடும், 47 ஜட்கா வண்டியும் குதிரையும், 48 மிட்டாய் தயாரித்தல், 49 சில்லறை ஜவுளிக்கடை, 50 தகரப்பெட்டிகள், வாளி முதலானவை தயாரித்தல், 51 பாபர் சாப்பு, 52 பெட்டிக் கடை வியாபாரம், 53 ரேடியோ பழுதுபார்த்தல், 54 பனியன் வியாபாரம்.

இத்தனை தொழில்களை வகைப்படுத்தியிருக்கிறது.

இத்தொழில்களில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுக்கலாம். தாங்கள் வாழும் சூழலுக் கேற்ப, சாத்தியக் கூற்றுத் தக்கபடி இவற்றை செய்யலாம்.

முதலீட்டுக்கு தகுந்தவாறு தனியாகவோ, கூட்டாகவோ ஈடுபடலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் ஆரம்பிப்பதற்குரிய விபரங்களை பெற அரசின் சிறுதொழில் தகவல் நிலையங்கள் இருக்கின்றன. அல்லது சென்னையில் — கிண்டியில் உள்ள மத்திய அரசின் சிறு தொழில்கள் சேவை நிலையத்தில் நீங்கள் தேர்ந்தெடுக்கும் தொழில் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

அத் தொழிலுக்குத் தேவையான பொருட்கள், முதலீடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற பல விபரங்களை தெரிந்துக்கொள்ளலாம்.

நீங்கள் ஒரு தொழிலை தேர்ந்தெடுத்து உங்கள் மத்தியிலுள்ள படித்த—விசயம்தெரிந்த நபர்களை வைத்துக் கூட்டவோ—தனியாகவோ ஆரம்பிக்கலாமே!

(தொழில்களைத் தெரிந்து கொள்ள உதவும்வகையில் பலரது வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரமாகும் கட்டுரை இது.)

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வந்தாய்?'' என்றவாறு பஸ் நடத்துனரோடும் தகராறு பண்ணினார்களாம். முகாமிலுள்ள அகதிகள் சங்க உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியரையும் மாவட்ட வருவாய் அதிகாரியையும் அணுகி பேசியிருக்கிறார்கள். அதன் பின் நாகப்பட்டினத்திற்கும் சென்னைக்கும் தொலைபேசி மூலம் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டு 6ம்திகதி இரவுதான் அகதிகளை முகாலேயே ஏற்றுக் கொள்ளுமாறு உத்தரவு போடப்பட்டது. அதுவரையில் அகதிகள் முகாமுக்கு வெளியேதான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். இரவு 7 மணிக்குப் பிறகுதான் பதிவு செய்யப்பட்டனர். அன்றைய இரவு உணவையும் கூட முகாம் அகதிகள் சங்கத்தினர் ஏற்கனவே உள்ள அகதிகள் மத்தியிலேயே பணம்திரட்டித் தான் தயாரித்துக் கொடுத்தனர்,

கண்ணீரும் கம்பலையும், பசியும் பட்டினியும், களைப்பும் சலிப்புமாக வந்து சேரும் அகதிகளிடம் அதிகாரிகள் இப்படி நடக்கலாமா? தமக்கு அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் கூட அகதிகளை மனிதாபிமானத்தோடு நடத்தி மேல் நடவடிக்கைக்கும் மேலதிகாரி தொடர்பு கொள்வதற்கும் தாமே நடவடிக்கை எடுத்திருக்கலாமல்லவா?

—சர்லி

---


## ஸ்கிரீன் பிரிண்டிங் கற்றுக் கொள்ளுங்கள்

**மிகக் குறுகிய காலத்தில்**
**ஸ்கிரீன் பிரிண்டிங்கற்றுக் கொண்டு**
**சுயமாக சம்பாதிக்கலாம்**

பேப்பர், அழைப்பிதழ், விசிட்டிங் கார்ட், லெட்டர்தாள் லேபிள், ஸ்டிக்கர்கள், தகடுகள், பிளாஸ்டிக், பாட்டில் மூடிகள், பிளாஸ்டிக் பெஞ்ச்சுகள், ரெக்ஸின் பேக்ஸ், பர்ஸ் ஹேண்ட் பேக்ஸ், சூட்கேஸ், விளம்பர துணிப்பைகள் முதலானவற்றில் ஸ்கிரீன் பிரிண்டிங் செய்ய மிகக் குறுகிய காலத்தில் கற்றுகொண்டு சுயமாக சம்பாதிக்கலாம்.

விபரங்களுக்கு :

## ஸ்டார் ரப்பர் ஸ்டாம்ப் ஒர்க்ஸ் & ஸ்கிரீன் பிரிண்டர்ஸ்

5-பி, சமாஸ்பிரான் தெரு
திருச்சி-620 008.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தானும், சீனாவும், அமெரிக்காவும், இங்கிலாந்தும், இலங்கை இனப் பிரச்சனையை இந்தியா எவ்வாறு அணுகுகிறது என்பதை அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதில் இந்தியா சர்வதேச அரங்கில் அதன் அந்தஸ்தை முற்றிலும் இழந்துவிடும். 1964ல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை மலையகத் தமிழர்களின் உரிமைகளை இலங்கைப் பறிப்பதற்கு இந்தியா ஒத்துழைத்ததன் மூலம் சர்வதேச கண்டனத்தைப் பெற்றுக் கொண்டது. இப்பொழுது சிங்கள வெறியாட்டம் தமிழர்களின் உயிர்களைப் பலி கொண்டு, தமிழர்களின் மாநிலத்தை இரத்தக் காடாக்கி, தமிழ் மக்கள்மீது முப்படைகளையும், காடையர்களையும் ஏவி விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது இந்தியா என்ன செய்து கொண்டிருக்கிறது.

எங்கள் போராளிகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. அடைக்கலம் கோரியவர்களை நாடு கடத்திக்கொண்டிருக்கிறது. ஆயிரமாயிரமாய் தமிழ் அகதிகள் அலைகடல் தாண்டி இந்திய மண்ணில் அடைக்கலம் புகுந்தும், இலங்கைக் காடுகளில் ஒழிந்து நடுங்கிக் கொண்டும், சட்ட விரோதமாய் சிங்களச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் உண்ணா விரதமிருந்து மடிந்து கொண்டிருக்கும் பொழுதும், இந்தியா மிக, மிக, அமைதியாக, மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்று கூறும் பொழுது தமிழ் உள்ளங்கள் எப்படிக் கொதிக்கும், எப்படிக் குமுறும் என்று சற்றே சிந்திக்க உங்களுக்கு நேரம் கிடைத்ததோ என்னவோ? நீங்கள் எவ்வளவோ நிதானம் படைத்தவர்கள் என்பது உண்மைதான் என்றாலும், அன்னை இந்திரா கொலையுண்டபோது, உங்கள் உள்ளம் எப்படிச் சினந்து, சீறியது. எங்கள் அன்னையரும், தம்பியரும், சகோதரிகளும், சகோதரர்களும் சிங்கள இனவெறியர்களிடம் சிக்கிச் சீரழியும் போது எங்கள் உள்ளங்கள் குமுறாதா? எங்கள் இரத்தம் கொதிக்காதா? எங்கள் தோள்கள் தினவெடுக்காதா? இந்தியாவின் டெலிபோன் அழைப்புகளையும், ஆழ்ந்த கவலைகளையும் சற்றேனும் சட்டை செய்யாத ஜயவர்தனாவுடன் ஆற, அமர அமர்ந்து அரசியல் தீர்வு பற்றி ஆலோசனை நடத்துவது அவ்வளவு எளிதான காரியமா? எங்கள் இதயங்கள் இன்னும் மரத்துவிடவில்லையே!

பெருமதிப்பிற்குரிய பிரதமர் அவர்களே, இலங்கை வாழ்த் தமிழர்கள் இந்தியாவைத் தமது பழம்பெரும் பூமியாகவே கருதுகிறார்கள். இங்கு அன்னையின் அன்பையும், பண்பையும்; பற்றையும், பாசத்தையும் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு அறிகுறிகள் இல்லாவிட்டால், அதனைச்சிங்களத்துப்பாக்கிகளைவிடக் கொடுமையான கொலைக்கருவியாகக் கருதுவார்கள். சிங்களவர்களிடம் தயவையும், தாட்சன்யத்தையும, நீதியையும், நேர்மையையும் நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால், உங்களிடம் அன்பையும், ஆதரவையும், அக்கறையையும் முழுமையாக எதிர்பார்க்கிறோம். வெந்த புண்ணில் இந்தியா வேல் பாய்ச்சாது என்றுஉறுதியாக நம்புகிறோம். அடைக்கலம் புகுந்தவர்களை அச்சுறுத்துவது அரசதர்மமாகாது. என்று ஆணித்தரமாக நம்புகிறோம். எங்கள் போராட்டத்தில் இந்தியாவிற்கு தவிர்க்க முடியாத பங்கிருக்கிறது என்று ஆழமாக உணருகிறோம். எங்கள் உணர்வுகளுக்கு வரலாறு சான்றுபகர்கிறது. முப்பது லட்சம் தமிழ் மக்கள் மட்டுமே என்றாலும், நாங்கள் இந்தியாவின் தன்மானத்துக்கு, தற்பாதுகாப்புக்கு அடையாளச் சின்னங்கள். எங்கள் உரிமைப் போராட்டத்தில், அதன் வெற்றியில் இந்தியாவின் தன்மானமும் தற்பாதுகாப்பும் அடங்கியுள்ளது! எங்கள் தோல்வியில் இந்தியாவிற்கு நீங்காத பழி நேரிடும். எதிரியின் வாள்கள் இன்று எங்கள் நெஞ்சத்தை துளையிடுகின்றன. நாளை இந்தியாவின் எல்லையையே அவைகள் துளைத்துவிடும். **இந்திய சமுத்திரத்தில் ஏவுகணைகள் பாய்வதற்கு எங்கள் கல்லறைகள் நிலைக்களனாகும்.** இந்தியா தென்புலத்தில் தோல்வியைக் கண்டதில்லை. வரலாறு மாறாதிருக்க வழி வகுக்குமாறு உங்களை வணங்கிக் கேட்டுக் கொள்கிறோம், பிரதமரே!

எங்கள் போராளிகளையும், சிங்கள இனவெறிப் படைகளையும் ஒரே தராசில் எடைபோடும் தவற்றை இந்தியா செய்யாது என நம்புகிறோம்.

நீங்கள் கேரளத்தில் கிருஷ்ண ஜயந்தி அன்று அழகான உரையாற்றி உள்ளீர்கள். தீமைகள் பெருகும் பொழுதெல்லாம் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலகனாக ஆண்டவன் அவதரிப்பான் என்ற உண்மையை நீங்களும் நம்புகிறீர்கள். நாங்களும் நம்புகிறோம். கீதைப் பேச்செல்லாம், பாரதப் போருக்குத்தான் வழிவகுத்தது. திம்புப் பேசசெல்லாம், எந்தத் தீங்கைக் களைந்தது? பாரதப் பெருமக்களே! எங்கள் துயர் தீர்க்க முன்வரவேண்டும். உங்கள் சர்வதேச அரசியல் திறமைக்கு சான்று படைக்க வேண்டும்.

நம்பிக்கையுடன்,

**பிறைகுடி**

---

(9ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வெற்றி நடை போடுகிறது.

கிராமங்களில் ஓலங்கள் பெருகும், நகரங்கள் தொழில் மய மாக்கப்படும்.

வேண்டுகோள்:

மக்கள் மத்தியில் நம்பிக்கை கொண்டுள்ள அமைப்புகள். தனி நபர்கள்; ஊராட்சி, பேரூராட்சிகளின் அதிகாரங்களை கைப்பற்ற முனைய வேண்டும்.

மக்களுக்கு சேவை செய்வதில் ஏற்படும் அதிகார அடக்கு முறைகளை வேஷம் போட்டு காட்ட வேண்டும்.

வட்டார அளவிலான மக்களோடு ஒன்றுபட்டு செயல்பட இது ஒரு வாய்ப்பாகவும் இருக்கும்.

இறுதியாக:

பூதம் வருகிறது! வருகிறது! -என்ற கதை போல ஊராட்சி தேர்தல்கள் நமக்கு காட்சி காட்டிக் கொண்டிருக்கிறது. இது வராமலேயே போய் விடுமோ?

**கேசவன்**

---

## 476 அமைப்புகள்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய மக்கள் சுமார் 4 லட்சம் பேர் இத்தியாவில், தமிழ் நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் குடியேறியுள்ளனர். இவர்களுக்கு சேவை செயவதற்கென சுமார் 476 பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் உள்ளன.

---

## பெண்களும் சிறுவர்களும்

அனைத்துலக தொழிலாளர் (ஐ. எல். ஒ.) அறிக்கைபடி உலகத்தில் 625 மில்லியன் பெண்கள் உழைக்கச் செல்கிறார்கள், இந்தியாவில் தான் உலகிலேயே அதிகமான உழைக்கும் சிறுவர்கள் இருக்கிறார்கள். (16. 5 மில்லியன்)

---

Editor & Publisher : T. S. RAJU, Gangaiamman kovil street, Madras- 600 094. Printed: L. S. Srinivasan Ji Kalidas Press, 29, B.E. Colony, 4th Street, Madras-24 Published in Collaboration with the ISLAND TRUST,

Regd.No. R. N. 42556/83 No. TN/MS(C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

# மக்கள் மறுவாழ்வு

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
1. தெற்கு கங்கையம்மன் கோயில் 2வது தெரு
சென்னை—600 094.

# கூலி உயர்வில் ஏனிந்த பாகுபாடு காட்ட வேண்டும்?

## 'பல்லவன்' ஊழியர்கள் பிரதமருக்கு முறையீடு

"இந்திய அரசின் மறுவாழ்வளிப்பு வாக்குறுதிகளை நம்பி, நிம்மதியான வாழ்வு தேடி தாயகம் திரும்பிய இலங்கை அகதிகளாகிய நாம் கூலி உயர்வு வழங்குவதில் மாற்றாந்தாய் பிள்ளைகளால் நடத்தப்படுகிறோம். எங்களுடைய நியாயப்பூர்வமான கோரிக்கைகள் கூட ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. விளைவு? வறுமைக் கோட்டின் அடிமட்டத்திற்கே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே எங்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யுங்கள்"

இவ்வாறு சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பயணக் குறிப்பாளர் "ட்ரிப்ரிகாடர்" பதவியில் அமர்த்தப்பட்டுள்ள இலங்கை அகதிகள் 21 பேர் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுத்து மூலமாக முறையிட்டுள்ளனர்.

1964ம் ஆண்டு இலங்கை இந்திய உடனடிக்கையின் கீழ் தாயகம் திரும்பிய இலங்கை அகதிகள் 21 பேருக்கும் தகுதிக்கேற்ப வேலை—சம வேலைக்கு சம ஊதியம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சென்னை பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அகதிகள் கூட்டுறவு வங்கியின் மூலமாகவேலைக்கு அமர்த்தப்பட்ட இத்தொழிலாளர்கள் ஒவ்வொருவர் பேரிலும் தலா ரூ. 15,000- இவ் வங்கி பல்லவன் போக்குவரத்துக் கழகத்துக்கு கடனாக நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

இத்தொழிலாளர்கள் பயணக் குறிப்பாளர்களாக (ட்ரிப்ரிகாடர்) நியமிக்கப்பட்டிருந்த போதிலும் நேரக்குறிப்பாளர் (டைம்கீப்பர்கள்) வேலைகளுக்கே ஈடுபடுத்தப் படுகின்றனர். ஆனால் நேரக் குறிப்பாளர் (டைம்கீப்பர்) சம்பளம் வழங்கப்படுவதில்லை பயணக் குறிப்பாளர் சம்பளம் நேரக்குறிப்பாளர் சம்பளத்தைவிட குறைவானதாகும்

பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஒரே மாதிரியான தொழில்களிலும்கூட இரண்டு விதமான சம்பள விகிதத்தை அமுல் செய்கிறது. இதைக் கண்டித்து 15 பயண குறிப்பாளர்கள் (ட்ரிப்ரிகார்டர்கள்) 13-8-82ல் உயர் நீதிமன்றத்தில் ரிட்மனுவொன்றை தாக்கல் செய்தனர். (இவர்கள் அகதிகளல்ல) இம்மனுவை (இல 2010-80) விசாரித்த நீதி மன்றம் இந்திய சம்பளச் சபை 30 (டி) சட்ட விதிகளின்படி சம வேலைக்கு சம சம்பளம் சம்பந்தப்பட்ட பயணக்குறிப்பாளர்களுக்கு (ட்ரிப்ரிகார்ட்டர்கள்) வழங்கப்படல் வேண்டும் என தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பின் பிறகு சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்பட்டது. ஆனால் அதே தொழில் ஈடுபட்டுள்ள இலங்கை அகதிகளுக்கு இச் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

நீதி மன்ற தீர்ப்பு வெளியாகி 3 வருடங்கள் ஆகிய பல்லவன் நிர்வாக இலங்கை அகதிகள் விசயத்தில் சம வேலைக்கு சம சம்பளம் என்ற கொள்கையை பின்பற்ற பிடிவாதமாக மறுத்து வருகிறது இப்போக்கு நீதிமன்ற முடிவிற்கு மாறானதாகும்.

எனவே இலங்கை அகதிகள் விசயத்தில் பல்லவன் நிர்வாகம் காட்டி வரும் பாகுபாடுகளைப் போக்கி சம வேலைக்கு சம சம்பளம் என்ற அடிப்படையில் போதிய சம்பள உயர்வு எங்களுக்கு கிடைப்பதற்கு பிரதமர் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென சம்பந்தப்பட்ட 21 இலங்கை அகதிகளும் இம்மனுவில் கோரியிருக்கிறார்கள். ○

# உயர்த்தப்பட்டுள்ள வீட்டுக் கடனுதவி விபரம்

சிறிமாவோ — சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் தாயகம் திரும்பிய மக்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் வீட்டுக் கடன் உயர்த்தப்பட்டுள்ளது. நகரப்புறத்திற்கு ரூ.10,000ம் கிராமப்புறத்திற்கு ரூ.6,000ம் ஆக தற்போது வீட்டுக் கடன் உயர்த்தப்பட்டுள்ளது.

நகரப்புறத்தில் வீடு கட்ட மனைகள் வாங்க ரூ.1000ம் மனை சீர்த்திருத்தம், பாதை அமைத்தல், கழிவுநீர் வடிகால் அமைத்தல் தண்ணீர் வசதி, மின்சார வசதி போன்ற சிலவுகளுக்காக ரூ.2,500ம் கட்டுமான வேலைக்கு ரூ.6,500ம் ஆக ரூ. 10,000 என உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் வீடு கட்ட வீட்டுமனை பெற ரூ. 600ம், மனை சீர்திருத்தம் பாதை அமைத்தல், கழிவு நீர் வடிகால் தண்ணீர் வசதி, முதலியனவைகளுக்குரிய சிலவுக்காக ரூ. 1,200ம், நிர்மான வேலைக்காக ரூ.4,200ம் என ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ○